Koviloor Digital Library

திருநெல்லை

ஆன்மீகத் திங்களிதழ்

விசுவாவசு - புரட்டாசி - 2025 - அக்டோபர் | இணைய வழி - மலர் -3- இதழ் - 2

அருள்மிகு
வள்ளி தெய்வானை உடனுறை சண்முகர்

தென் சபாநாயகர் கோவில் கோவிலூர்

Koviloor Digital Library

திருநெல்லை

இணைய வழி ஆன்மீகத் திங்களிதழ்

விசுவாவசு – புரட்டாசி

2025– அக்டோபர்

இணையவழி மலர் 3 – இதழ் 2

(தனிச் சுற்றுக்கு மட்டும்)

சிறப்பாசிரியர்

பொற்கிழிக் கவிஞர்

சொ.சொ.மீ. சுந்தரம்

ஆலோசகர்

தமிழாகரர் தெ. முருகசாமி

ஆசிரியர் குழு

வெளியிடுபவர்

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் மடாலயம்

கோவிலூர் 630 307

மானகிரி (அஞ்சல்)

(வழி) காரைக்குடி

சிவகங்கை மாவட்டம்

04565–236846

94433 37011

இணைய அச்சாக்கம்

தீபா ராஜேஸ்வரி

கோவிலூர்

பொருளடக்கம்

பக்கம்

1. ஆசிரியுரை... 3
2. கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் அறிமுகம்... 12
3. சமய எழுச்சியால் சமூக மறுமலர்ச்சி காட்டிய அப்பர்.................................... 16
4. அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப !.. 26
5. திருவிளையாடற் புராணம் தொடர்.......... 32
6. காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம்........................ 39
7. அம்மையப்பருக்காய்த் தம்மையே அர்ப்பணித்த அமர்நீதியார்... 43
8. சிவாலயங்களின் சிறப்புகள்..................... 48
9. திவ்ய தேச கவிதை தரிசனம்.................. 52
10. பெரியபுராண கதை களம்....................... 60
11. தென்சபாநாயகர் கோவில் தரிசனம்........ 61
12. ஒலிப்பேழை... 62
13. பயிற்சிப்பேழை.. 63
14. கோவிலூர் ஆண்டவர் நூலகம்............... 64
15. முந்தைய இதழ்கள்................................. 66

Koviloor Digital Library

ஆசியுரை

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் ஆதினகர்த்தர்

அனைவருக்கும் நிறைந்த ஆசிகள். நாள்தோறும் புதிய புதிய நன்முயற்சிகளில் இறை பரம்பொருள் நம்மை வழி நடத்தி வருகிறது. இந்த மாதத்தில் பல புதிய நல்ல முறையில் முன்னேறிக் கொண்டு இருக்கின்றன.

எட்டுத் திக்கும் செல்லும் தமிழ்க் கலைச் செல்வங்கள்

தீபத் திருநாள் அன்று நூல் உலகிலும் நூலக உலகிலும் புதியதொரு தீபத்தை நாம் ஏற்றி வைத்துள்ளோம். கோவிலூர் மடாலயத்தில் பல்லாயிரக் கணக்கான நூல்கள் பாதுகாப்பில் பராமரிப்பில் உள்ளன. கோவிலூர் நூலகச் செல்வங்களை இணையவழியில் அதாவது டிஜிட்டல் நூல்களாக படிக்கவும், பரவலாக்கவும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம். பத்தாண்டு காலமாக எட்டாயிரத்து நானூறு நூல்கள் இணையவழியில் எவ்வித கட்டணமும் இன்றிப் படிக்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் இது பல ஆயிரம் நூல்களைக் கடந்து இணைய நூலகக் கடலாக விளங்கும்.

இணைய வழி நூலக வளர்ச்சியோடு தற்போது ஒரு நூலின் செய்தியையும் அதன் மையத்தையும் அறிந்து கொள்ளச் செய்யும் அதி நவீன முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். தீபாவளித் திருநாள் அன்று புதையல் என்ற மும்மொழி நூல் அறிமுக இணைய இதழைத் தொடங்கியுள்ளோம். இந்தப் புதையல் என்ற இதழானது வாரம் தோறும் வெளிவரும். வாரம் ஒன்றுக்கு நூல் இரண்டு என்ற

அடிப்படையில் நூற்செய்தியைச் சுருக்கமாக தரும். மேலும் இந்த நூல் கருத்துச் சுருக்கத்தை இந்தி மொழி , ஆங்கில மொழி ஆகியவற்றின் வழியாகவும் அம்மொழி சார்ந்த அன்பர்கள் படிக்க இயலும். இதனால் தமிழ் நூல் இந்திய அளவிலும் உலக அளவிலும் பரவலாக்கம் பெறும். வெவ்வேறு மொழி பேசும் மக்களும் தமிழ் மொழியில் உள்ள அரிய அறிவுச் செல்வங்களை அறிந்துகொள்ளமுடியும். மேலும், இருவர் நூற்கருத்துகளை உரையாடும்

நிலையில், மும்மொழி ஒலி வடிவில் நூல் பற்றி அறிந்துகொள்ள இயலும்.

இது வரை வெளியான புதையல் இதழ்களை படித்து மகிழ மேல்காணும் படங்களை அழுத்தவும்

'புதையல்'இதுவரை, "கி.வா.ஜ அவர்களின் கந்தரலங்காரச் சொற்பொழிவுகள்",

"நம் தேவகோட்டை நன்னகர்", அ.ச.ஞானசம்பந்தன் எழுதிய ''பெரியபுராணம் ஓர் ஆய்வு" ," திருமுருகாற்றுப்படை தெளிவுரை," ஆகிய 4 நூல்கள் வெளிவந்து ஒவ்வொரு நூலையும் சுமார் 1000க்கும் அதிகமானோர் படிக்கிறார்கள், கேட்கிறார்கள், மகிழ்கிறார்கள். குறிப்பாக மும்மொழி மொழியாக்கம், உச்சரிப்பு ஆகியன மிக நன்றாக அமைந்துள்ளது என்ற பலரின் பாராட்டு நாம் செய்வதைச் சரியாகத்தான் செய்கிறோம் என்ற மன நிறைவைத் தருகிறது. இந்தி மொழியாளர்கள் இதன் இந்தி வடிவத்தின் வழியாகத் தமிழ்ச் செல்வங்களை அறிந்துகொண்டு

Koviloor Digital Library

ஆச்சர்யப் படுகிறார்கள். ஆங்கில மொழி வடிவம் ஒலி வடிவம் ஆகியன உலக மக்களால் பாராட்டப் பெறுகிறது.

காசி நகர்ப்புலவர் பேசும் உரையைக் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்ய வேண்டும் என்று பாரதியார் பாடினார். நமது தமிழ் மண் சார்ந்தநூல்களைக்காசியிலும்,உலகம் முழுவதும் கேட்க ஒரு கருவியாக ‘‘புதையல்’’ அமைந்து வருகிறது. இந்த நவீன முயற்சி வெற்றியடைந்து வருவதில் இறைகருணைக்கு நன்றி சொல்கிறோம்.

இதன் வளர்ச்சியின் அடுத்த நிலையாக ஒவ்வொரு நூலும் இன்னும் பல மொழிகளில் அறிந்து கொள்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்பெற்று வருகிறது.

காசியில் குழந்தைகளின் கல்விக்குக் கலங்கரை விளக்கம்:

மாண்டிசோரி பயிற்சித் திட்டத்தின் முன்னோட்டம்

இந்தத் தொலைநோக்குத் திட்டத்தின் ஆரம்பப் புள்ளி சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு நிகழ்ந்த ஒரு சந்திப்பு. காசியின் மண்டல ஆணையர் திரு. ராஜலிங்கம் ஐ.ஏ.எஸ். அவர்களை சந்தித்தபோது, உத்திரப் பிரதேசத்தில் மாண்டிசோரி கல்வி முறையை அறிமுகப்படுத்துவது குறித்து விவாதித்தோம்.

தொலைநோக்குப் பார்வைக்கும், அடிமட்ட மக்களின் நலனில் அசைக்க முடியாத அக்கறைக்கும் பெயர் பெற்ற திரு. ராஜலிங்கம், இந்தப் பயிற்சியை நகர்ப்புறப் பள்ளிகளைத் தாண்டி, அங்கன்வாடி ஊழியர்களுக்கு அளிக்க முடியுமா என்ற புதிய கோணத்தை முன்வைத்தார். இதுவே இந்தத் திட்டத்தின் திருப்புமுனையாக அமைந்தது.

உடனே நம் பழைய மாண்டிசோரி தொடர்புகளை புதுப்பித்து இது குறித்து விவாதித்தோம்.

அப்போது நமக்கு வியப்பளிக்கும் செய்தியாக ,மாண்டிசோரி முறையின் தரத்தைக் காக்கும் நோக்கில், உலகத் தலைமையகமான AMI மற்றும் “எஜுகேஷன் சான்ஸ் பிராண்டியர்” இணைந்து பயிற்சியாளர்களுக்கான செலவை ஏற்கும் திட்டம் முன்மாதிரியாக ஆந்திரப் பிரதேசத்தில் சுமார் 52 அங்கன்வாடி ஊழியர்களுக்கு வெற்றிகரமாகப் பயிற்சி அளிக்கப்பட்டது, நமக்குத் தெரிந்தது.

கோவிலூர் மடாலயத்தின் முன்னோடியான சீர் வளர் சீர்

Koviloor Digital Library

நாச்சியப்ப சுவாமிகள் தனது எண்பதாம் ஆண்டு பிறந்த நாளில் நூற்றுக்கும் மேற்பட்ட மாண்டிசோரி பள்ளிகளைத் தொடங்கும் எண்ணத்தில் இருந்தார். திட்டம் எண்ணமாகவே நின்றிருந்த நிலையில் தற்போது அந்த எண்ணத்தின் செயல்வடிவம் உத்திரப் பிரதேச மாநிலத்தில் காசியில் கைகூடும் வாய்ப்பு கிடைத்துள்ளது,

கோவிலூர் மடாலயம் ஹைதராபாத்தைச் சேர்ந்த ஒரு பயிற்சியாளருடன் இணைந்து காசிக்கான மாண்டிசோரி கல்வித் திட்டத்தின் முன்னோடித் திட்டத்தை (Pilot Project) முன்மொழிந்துள்ளது. இத்திட்டத்தின் முன்மொழிவு மண்டல ஆணையர் மூலம் ICDS அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல, விரைவில், பயிற்சியாளர்கள் மற்றும் ICDS நிர்வாகி ஆகியோருடன் நாம் பங்கேற்கும் முத்தரப்புக் கூட்டம் காசியில் நடைபெற உள்ளது. இந்தத் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படும் நிலையில் உத்திரப் பிரதேசத்தில் ஆரம்பக் கல்வித் தரம் மேம்பட்டு, நாட்டின் வளர்ச்சிக்கு அது ஒரு முக்கிய பங்களிப்பாக அமையும்.

இத்திட்டத்தின் உந்துசக்தியாக விளங்கி, இந்தக் கனவுத் திட்டத்திற்குக் காரணமாக இருந்த மண்டல ஆணையர் திரு. ராஜலிங்கம் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு நன்றி.

காசியிலிருந்து பீகார் வரை: குழந்தைக் கல்வி சேவையின் விரிவாக்கம்

சமீபத்தில் நடைபெற்ற தேவகோட்டை கந்த சஷ்டி நிகழ்வில், தேவகோட்டையைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ் அதிகாரியான திரு.லட்சுமணன் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த சந்திப்பின்போது, நாம் காசியில் மேற்கொண்டு வரும் சமூகப் பணிகள் குறித்து விவரித்தோம். குறிப்பாக நாம் காசியில் முன்மொழிந்திருக்கும் ,அங்கன்வாடி ஊழியர்களுக்கு உலக புகழ் பெற்ற மாண்டிசோரி முறை கல்வியைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர் பயிற்சி அளிக்கும் திட்டத்தை பீஹாரிலும் செயல்படுத்த இயலுமா என்று வினவினோம். காசிக்காக நாம் தயாரித்திருந்த திட்ட வரைவை அவரிடம் வழங்கினோம். பீகார் தேர்தல் முடிந்த பிறகு, இதுகுறித்து அவருடன் தொடர்புகொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிவு செய்துள்ளோம்.

Koviloor Digital Library

காசி வழிபாட்டில் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்கள்

கம்ப வாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்களின் நீண்ட நாள் ஆசையாக விளங்கிய காசி தரிசனம் இம்மாதத்தில் நமக்கும் ஐயாவுக்கும் வாய்த்தது. காசியில் இருநாள்கள் தமிழோடும், விசுவநாதர் அருளோடும் நாம் தங்கி இருந்த காலம் மனதிற்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது. கம்பவாரிதி ஐயா அவர்களுக்கு காசி விசுவநாதர் திருக்கோவில் தலைமை அதிகாரி திரு விஸ்வ பூஷன் மிஸ்ரா அவர்கள் வரவேற்று மரியாதை செலுத்தினார். மண்டல ஆணையர் திரு.இராஜலிங்கம் அவர்களும் ஐயாவைச் சந்தித்து உரையாடினார். இறையருள் காசியில் தமிழை வலம் வரச் செய்தது.

கந்தன் விழாவில் கருணை பெருக இரு வேண்டுகோள்கள்

தேவகோட்டை கந்த சஷ்டி விழா ஆண்டுதோறும் சிறப்புடன் நடைபெறும் இனிய விழா. இவ்வாண்டு நாமும் அதில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. அவ்விழாவில் இரு செய்திகளை நாம் வலியுறுத்தினோம். முதல் செய்தி

Koviloor Digital Library

இந்த இரு செய்திகளைக் கந்தன் கருணைக்கும் வைத்தோம். மக்கள் நன்மைக்கும் விதைத்தோம்.

மேலும் இம்மாதம் 17 ஆம் தேதி நடைபெற்ற பேரூர் சாந்தலிங்க ராமசாமி அடிகளாரின் நூற்றாண்டுவிழாவில் கலந்து கொண்டோம்.

திருவிழாக்களுக்காக பெருந் தொகை செலவிடப்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்பது.நகரத்தார் சமுதாயத்தின் நிதியாளுமைப் பண்பு ஆடம்பர செலவுகளுக்கு இடம் தராது. விழாச் செலவுகளைக் குறைத்து அந்த நிதியை மிகவும் பயன் தரும் சமுதாயச் செயல்பாட்டுக்குப் பயன்படுத்தலாம். இது குறித்து நாம் முதலாவதாக வலியுறுத்தினோம்.

அடுத்த செய்தி நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையில் திருவுளச் சீட்டு முறைமையைப் பின்பற்றுவது சமுதாய ஒற்றுமைக்கு வழி வகுக்கும் என்பதாகும். இந்த பாரம்பரிய முறை, தகுதியானவர்கள் யார் என்பதை இறைவனின் சித்தத்திற்கே விட்டுவிடும் ஒரு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. நவீன தேர்தல் முறைகளிலிருந்து விலகி, சமூக ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் பேணும் இந்த பாரம்பரிய முறை, மீண்டும் மலர வேண்டும். ஒற்றுமை ஓங்க வேண்டும். வேற்றுமை நீங்க வேண்டும்.

சிதம்பரம் பொன்னம்பலசாமி குருபூசையிலும், பழனியில் சாது சாமிகள் உபயமாக சண்முகருக்கு நடைபெற்ற கந்த சஷ்டி திருமுழுக்காட்டலிலும் கலந்து கொண்டு இறையருள் பெற்றோம்.

இவ்வாறு புதிய புதிய சந்திப்புகள், எண்ணங்கள், செயற்பாடுகள் நாளும் பெருகி நன்மை நடைபெற்று வருகிறது. அனைவருக்கும் நல்லாசிகள்

Koviloor Digital Library

24ம் தேதி கம்பவாரிதியின் பிறந்த நாளுக்கு அனுப்பிய வாழ்த்துப்பா

கம்பவாரிதி வாழ்த்து

இலங்கை மண்ணில் பிறந்து வளர்ந்த

ஜெயராஜ் அவர்கள் தமிழின் ஜோதி,

கம்பன் வாரதி, கவியின் பேரொளி,

பாராட்டுகிறோம் உங்கள் பெருமை !

மகாபாரதம் சொல்லும் மகத்துவம்,

ஔவையார் அமுதம் ஊட்டும் அறிவு,

திருவாசகம் தேன் தந்து மகிழ்வீர்,

புகழ் பாடும் உலகம் உங்கள் பாதம் !

சொற்பொழிவில் சுவை கலந்து,

இளைஞர்களுக்கு வழிகாட்டி,

தமிழ் மொழியை உயர்த்தும் தலைவா,

வாழ்த்துகிறோம் நீடுழி வாழ்க !

பொறாமை அகற்றி, அறம் போதித்து,

இல்லறம் சிறக்கும் இனிய உரை,

இலங்கை ஜெயராஜ் எங்கள் குரு,

பாராட்டு மழை பொழியட்டும் என்றும் !

திருக்குறள் விளக்கி அறம் பரப்பி,

சைவ சித்தாந்தம் செம்மை தந்து,

ஞானவழி நடத்தும் ஜெயராஜ்,

உலகம் உய்வடைந்திடுவீர் !

பிறந்தநாள் இன்று பொலிவு தர,

புகழ்மாலை சூடி மகிழ்ந்திடுவீர்,

ஆயுளும் அறிவும் அமைதியோடு,

வாழ்க நீர் வளமுடன் நூறாண்டு !

Koviloor Digital Library

வேதியியலில் நோபல் பரிசு பெற்ற ஜப்பான் வேதியியலாளர் சுசுமு கிடகாவா அவர்களுக்கு நமது கோவிலூர் ஆதினம் சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் அனுப்பிய வாழ்த்து கடிதம்

Kyoto University, 2019

கோவிலூர் மடாலயம்

8 அக்டோபர் 2025

அன்புடைய பேராசிரியர் கிடகாவா அவர்களுக்கு,

இரசாயனத்திற்கான நோபல் பரிசு வென்றதற்காக எனது இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் முன்னோடியான ஆய்வுகள் இதற்குரிய பெருமையைப் பெற்றுள்ளன என்பதில் எங்கள் மகிழ்ச்சி அளப்பரியது.

2019 ஆம் ஆண்டில் க்யோட்டோ பல்கலைக்கழகத்தில் உங்களை சந்தித்தது இன்னும் இனிமையான நினைவாக உள்ளது அப்போதே , இப்படிப்

Koviloor Digital Library

பட்ட உலகளாவிய அங்கீகாரம் உங்களுக்கு விரைவில் கிடைக்கும் என நான் எதிர்பார்த்திருந்தேன். மனிதகுலத்திற்குச் சேவை செய்யும் புதிய அறிவியல் வழிகளைத் திறந்த உங்கள் பங்களிப்பு உண்மையிலேயே சிறப்பானது.

நம் சந்திப்பிற்குப் பிறகு, நான் இந்தியாவில் உள்ள கோவிலூர் மடாலயத்தின் ஆதீனகர்த்தராகப் பொறுப்பேற்றுள்ளேன். உங்களுக்கு வசதியான நேரத்தில் இந்தியாவிற்கு வருகை தருமாறு அன்புடன் அழைக்கிறோம் — அது அமைதியான தனிப்பட்ட வருகையாகவோ அல்லது "அறிவியல் – சமூகச் சேவைக்காக" என்ற தலைப்பில் பொதுக் கருத்தரங்கமாகவோ இருக்கலாம். உங்கள் கால அட்டவணைக்கேற்ப ஏற்பாடுகளை எங்கள் அலுவலகம் மகிழ்ச்சியுடன் ஒருங்கிணைக்கும்.

உங்களைப் பற்றிய என் மதிப்பும் அன்பும் நிறைந்த நல்வாழ்த்துகளுடன்,

சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் மடாதிபதி

Koviloor Digital Library

கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் அறிமுகம் – 6

தவத்திரு சாந்தலிங்கர் இயற்றிய வைராக்கிய சதகம் பகுதி - 1

- முனைவர் மு.பழனியப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருவாடானை

கோவிலூர் மரபு வேதாந்த நூல்களில் ஒன்று வைராக்கிய சதகம். இதனை அருளியவர் தவத்திரு. சாந்தலிங்க சுவாமிகள். இவர் கோயம்பத்தூரை அடுத்து உள்ள திருப்பேரூரில் மடம் அமைத்து சிவத் தொண்டு புரிந்தவர். இந்நூல் நூறு பாடல்களைக் கொண்டது. அதில் முதல் பகுதி தத்துவப் பகுதியான சாத்திரப் பகுதியாகும். பிற்பகுதி தோத்திரம் எனப்படும் நிலையில் சிவபிரானின் பெருமைகளைப் போற்றிப் புகழ்வது. முதற்பகுதியான சாத்திரப்பகுதி மனித மனத்தின் இயல்புகளையும், மனித மனத்தில் எழும் குற்றங்களையும், மனக்குற்றங்கள் நீங்க வழிகளையும் சொல்லி மனத்தை சிவவழிப் படுத்துகின்றது. மனிதனின் மனத்தில் எழும் நல்ல எண்ணங்களை வளர்த்து, தவிர்க்க வேண்டிய எண்ணங்களைத் தவிர்க்க இந்நூல் வழி சொல்லுகின்றது.

மனிதனின் வாழ்நாள் மிகக் குறைவே. அந்தக் குறைவான வாழ்நாளில் ஈசனை எண்ணி நல்வழியில் செல்ல வேண்டும். மனைவி, மக்கள் யாரும்

Koviloor Digital Library

துணையில்லை. சிவனே துணை. உயிர் போனபின் மீண்டும் வராது. தனித்து விடப்பட்ட மனைவி மக்களைக் காக்க மீண்டும் பிறவி வாய்க்காது. ஆகவே மனிதனுக்குத் துணை யாருமில்லை. அவன் யாருக்கும் துணையாகவும் இருப்பதில்லை. பிறந்த காலம் முதல் நிறைவு காலம் வரை ஒரே துணையாக இருப்பது சிவத் திருவடிகளே என்பதை அறிந்து கொள் மனமே.

மனம் விரும்பியவற்றை அனுபவிக்க செல்வம் தேவை என்று எண்ணி பணத்தைச் சேர்க்கின்றது. அந்தப் பணம் நிரந்தரத் துணை இல்லை. நிலைத்து நிற்கப் போவதுமில்லை. எனவே செல்வத்தின் மீதான ஆசையை விடு மனமே.. மன்னர் வாழ்வும் சிறந்ததில்லை. மகேசன் துணை வாழ்வு சிறந்தது. எனவே பொன்னாசையை விலக்கு.

நிலம், மனை மீதும் மனம் ஆசை கொள்கிறது. அங்கு நிலம் வாங்க, இங்கு நிலம் வாங்க, ஆசைப் படுகிறது மனம். மனமே உனக்கு இடம் மனித உடல். அந்த உடம்பு உழல்வது மண். மண்ணை இடமாக எவ்வாறு கருத முடியும். எனவே மண்ணாசையை விலக்கு.

அடுத்து நீ அடிமையாவது புகழுக்கு. ஒருவருக்கு ஏற்படும் புகழ் நிலையானதா.. இல்லை. முற்பிறவியின் புகழ் இப்பிறவியில் அமைகிறதா.. யார் புகழ்ந்தாலும் இகழ்ச்சியாகவே ஏற்றுக்கொள். வீடு அடைதலே நிரந்தரப் புகழ். ஓரில் நேரில் வீடு உறுதலே புகழ், பிறப்பு உறல் இகழ்.

அடுத்து உன்னையே நீ வியந்து கொள்கிறாய் மனமே.. நீ பெரியவனாஞ் சிவனே பெரியவன். பிறப்பித்து வீடு அருளும் அவனே பெரியவன். மனமே மனிதப் பிறப்பினில் சேரும் இன்பம் எதுவும் இல்லை. எல்லாம் துன்பமே. சிவ இன்பமே இன்பம். மனமே நீ மெய்யடியாரோடு இணைந்து சிவகதி செல்வதாக நடிக்கிறாய். உண்மையில் இறைவனை நாடு. பல நூல்கள் படித்தும் நீ உண்மையை அறியவில்லை. பிரம்மமும் நீயும் ஒன்று என்று உணர். மதச் சண்டைகளை விடு. வழிபாட்டுச் சண்டைகளை விடு. மார்க்கண்டேயனைப் போல

Koviloor Digital Library



நூலின் இணைய இணைப்பு

சிவனுடன் ஐக்கியமாகிவிடு. காலன் அணுக மாட்டான். உடலுக்குக் கிடைத்திருக்கும் மின்னல் போன்ற வாழ்நாள்களில் இறைவனை நாடி வீடுபேறு பெறு.

கடந்த காலத்தை எண்ணிக் கலங்காதே.. நிகழ்காலத்தையும் எண்ண வேண்டாம். இவை கர்ம வினைப் படி வருவன. எதிர்காலம் என்ற ஒன்றில் ஈசனை நாடு மனமே. மனமே ஐம்பொறிகளின் வழி நீ நடந்தாலும் நீ நடப்பித்தாலும் ஈசனையே எண்ணிக்கொண்டிரு. ஆசையை அறு. ஆசை அகன்றால் எண்ண அலைகள் அடங்கும். பழைய நினைவுகள் பறந்து போகும். இவ்வாறு செய்தால் ஈசன் நிலைப்பான்.

சிவத்தைக் காண இயலாது. மனத்தினால் அறிய இயலாது. மனம் அமைதியுடன் இருந்து சும்மா இருக்கும் நிலை வாய்த்தால் மட்டுமே சிவனை அடைய இயலும். மனம் சும்மா இருப்பதே சுகம். எண்ணங்கள் ஏதும் அற்ற மனநிலையே சிவ நிலைக்கு அழைத்துச் செல்லும்.

மனம் ஏன் அலைகிறது. ஐம்பொறிகளால் ஆசை ஏற்படுகிறது. இதனால் மனமானது கடல் அலைகள் போல அலைப்புறுகிறது. ஆழ்கடல் போல அமைதியுடன் மனம் இருந்தால் துயரம் இல்லை. வீடு பேறு உண்டு.

மனமே உலகப் பொருள்கள் அனைத்திலும் இறைவனைக் காண். மானுட வடிவில் வந்து

Koviloor Digital Library

உபதேசம் அருளிய குருவை இடைவிடாது தியானம் செய். அதுவே வீடு பேற்றுக்குச் சிறந்த வழி. வாக்கினை மௌனம் ஆக்கு. மனமே நீ மௌனம் பழகு. அது இது என்று பேதம் கொள்ளாதே. நான் செய்தேன் அவர் செய்தார் என்று சொல்லாதே. எல்லாம் சிவன் செயல்.

ஓவியத்தில் வரையப்பட்ட தீபம் போல மனமே அசைவற்று இரு. சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை போல் முன்னதும் பின்னதும் ஒன்றாய்க் கருது. சிவமே நாம் ஆனால் எல்லாச் செயலும் சிவன் செயல்களே. உள்ளத்தில் தெளிவு வந்தாலும் மயக்கம் வந்தாலும் அனைத்திற்கும் சிவனே காரணம். மறத்தலும் நினைத்தலும் ஆணவத்தின் மாயையின் இயல்பு. துறத்தலே வீடு.

ஒன்றும் நம் செயல் இல்லை. நல்வினை தீவினை எதற்கும் யாம் காரணமில்லை. தீமை வருகிறதென்றால் துன்பம் தெ்டர்கிறது என்றால் அதற்கும் காரணம் சிவனே. சிவன் இருக்க ஒரு துன்பமும் வாராது. அப்படி வந்தாலும் அவன் தந்ததே. அதனை யாரால் தடுக்க இயலும். மனமே நீ பலவகைகளில் உதவி வருகிறாய். வீடு பேறு அடையச் செய்யவும் உன்னால் அன்றி வேறு யாரால் இயலும்.

சிவ பெருமானே நமக்குத் தாய், தந்தை, குரு. அவனையே அனுதினமும் நேசி. அவன் மீது பற்று வை. எனினும் மனமே நீ இவ்வளவு அறிவுறுத்தியும் பெண்ணாசை கொண்டு அலைகிறாய். வயிற்றுக்கு விருந்து உணவு வேண்டும் என்று அலைகிறாய். பெண் பற்றையும் வயிற்றுச் சுவைப் பற்றையும் விட்டொழி. திருநீறு முதலான சிவச் சின்னங்களை அணிந்து சிவமாய் இரு. ஐந்தெழுத்தினை விடாமல் ஓது. நல்ல மலர் கொண்டு சிவனுக்கு மாலை சூட்டு. நால்வர் நல்லமுதைப் பாடு. சிவனடியார் அன்றி வேறு கூட்டுறவு வேண்டாம். சிவனடியார் அல்லார் பொருள் தரின் விரும்ப வேண்டாம்.

Koviloor Digital Library

சமய எழுச்சியால் சமூக மறுமலர்ச்சி காட்டிய

அப்பர்

பகுதி – 18

அப்பர் அமைத்த இலக்கியப் பாலம் அறமிருக்க மறம்விலைக்குக் கொண்ட நிலை

திருமதி மு. சுப்புலட்சுமி,
வரலாற்றாய்வர்
ஆசிரியர்: www.glorioustamils.com, www.attraithingal.com,
வலையொலி/ podcast
அற்றைத்திங்கள்...
வலையொலியில் தமிழொலி

காலந்தோறும் புதுமைக்கு வழிகொடுப்பினும் வேர்களை விடாத தமிழர் படைப்பியல் நெறி, இன்றுவரையில் தமிழர் பண்பாட்டுத் தொடர்ச்சிக்கும் மறுமலர்ச்சிக்குமான முதன்மை வித்துக்களில் ஒன்றெனலாம். தமிழர் முதன்மை உணர்வாம் காதலுக்கும் வீரத்திற்கும் இது பொருந்துவது வியப்பல்ல; இவற்றினின்று முற்றிலும் வேறுபட்ட பத்திமைப் பதிகங்களிலும், இலக்கிய வேர்களை விடாத படைப்பியல் நெறியைப் பொதித்து வைத்தவர் 'செந்தமிழின் சொல்வளப் பதிகத் தொடைபாடிய நாவுக்கரசு'.

அவ்வகையில், பழமொழிப் பதிகமாம் திருவாரூர்ப் பதிகத்தின் (04.005) மூன்றாவது பாடலில், அறத்தை முன்னிலைப்படுத்திய தமிழர் போக்கைக் கையாண்டார்

Koviloor Digital Library

அவர்.

பெருகுவித்தென் பாவத்தைப் பண்டெலாங் குண்டர்கள்தஞ் சொல்லே கேட்டு

உருகுவித்தென் னுள்ளத்தி னுள்ளிருந்த கள்ளத்தைத் தள்ளிப் போக்கி

அருகுவித்துப் பிணிகாட்டி யாட்கொண்டு பிணிதீர்த்த வாரூ ரர்தம்

அருகிருக்கும் விதியின்றி அறமிருக்க மறம்விலைக்குக் கொண்ட வாறே

என்பது பாடல்.

அன்பின் உயர்திறத்தைச் சோதித்துச்சோதித்து அடியவர்களை ஆட்கொண்ட சிவபெருமான், அப்பரிடம் அப்படியென்ன திருவிளையாடல் செய்தாராம்?

முதலில் புறச்சமயத்தார் சொல்கேட்டுத் திரியவைத்துப் பாவத்தைப் பெருக்கினார்;

அடுத்து, உள்ளத்தின் உள்ளிருந்த கள்ளத்தைப் போக்கி உருகுவித்தார்;

பின், பிணிகாட்டி அருகில் வரச்செய்தார்;

பிணிகாட்டிய ஆரூரர் அப்பிணியைத் தீர்த்தும் வைத்து அன்பனாக ஆட்கொண்டார்.

இது இன்றைய பல்முனைத் தேர்வு முறைகளைப் பின்னுக்குத் தள்ளும் சோதனைக் களம். இங்கு இறைவனே நேரடித் தேர்வாசான்; தன்னலமில்லா எண்ணுதற்கரிய தூய அன்பொன்றே வெற்றியாளருக்கான தகுதி. இந்தப் பணியில், இறைவனை அடியவர் உணர்வதும் அடியவரை இறைவன் ஆட்கொள்வதுமே பிறவிப் பயன்.

தமக்கு அளிக்கப்பட்ட கடுமையான தேர்வில், இறைவனை உணர்ந்ததோடு தம்மையும் தெளிவாக உணர்ந்தவர் தொண்டில் பழுத்த நாவுக்கரசர். இறைவனை "அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ ஒரு குலமும் சுற்றமும் ஒரூரும் நீ" (06.095.01), என்றுவந்து, தம்மையும் தம் தவறுகளையும் புரிந்துகொண்டு மற்றவர் அத்தவறுகளைச் செய்யாத வண்ணம் அறிவுறுத்தும் பண்பு அப்பருக்கே உரியதன்றோ?

இந்த அறிவுறுத்தலில்தான் நாவுக்கரசர் என்னும் பத்திமை ஆசிரியர், பழந்தமிழ் இலக்கியக் கூற்றுகளையும் தமக்கு முந்தைய படைப்பாளர்கள் ஆவணப்படுத்திச் சென்ற பண்பாட்டுக் கூறுகளையும் கையாண்டு, அவற்றின் தொடர்ச்சிக்கு வழியமைத்ததோடு

Koviloor Digital Library

வாசிப்போரை இன்றும் வியக்க வைக்கிறார்.

‘அறமிருக்க மறம்விலைக்குக் கொண்டவாறே’ எனுமிடத்தில், இறைவனை உணர்ந்து அருகிருப்பதே அறமென்றும் அதைவிடுத்த பிற சமயத்தார் தொடர்பும் சார்பும் மறமென்றும் உரைத்த உறுதிப்பாடு முந்தி நின்றாலும், சங்கம் மற்றும் சங்கம் மருவிய காலத்து வேறு சில ஒப்பீடுகளும் கண் சிமிட்டுகின்றன.

பிணிக்கு மருந்து

“பிணிகாட்டி யாட்கொண்டு பிணிதீர்த்த ஆரூரர்” என்று பாடலின் மூன்றாம் வரியில் சொன்னாரில்லையா? முதலில் பிணியை உண்டாக்கியவரும் இறைவரே; அதனைத் தீர்த்து வைத்தவரும் அவரேயாம். நோய்த் தீர்ந்து கிடைக்கும் நிம்மதியே ஆரூரர் அருகிருக்கும் நல்வினை.

சங்கக் காதலைத் தொடர்ந்த வள்ளுவரின் களவுக்காலக் குறிப்பறிதலில்

இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு

நோய்நோக்கொன் றந்நோய் மருந்து

(குறிப்பறிதல் 01)

காதலியின் கண்களில் உள்ளது இரண்டு வகை நோக்கம் ஒன்று, நோய் செய்யும் நோக்கம்; மற்றொன்று தான் தந்த நோய்க்குத் தானே மருந்தாகும் நோக்கமாம்.

அடுத்து வந்த புணர்ச்சி மகிழ்தலிலோ, பிணியைத் தந்து தானே மருந்துமாவதைத் தெளிவுபட விரித்துரைத்தார் வள்ளுவர்.

பிணிக்கு மருந்து பிறமன் அணி

Koviloor Digital Library

யிழை

தன்நோய்க்குத் தானே மருந்து (புணர்ச்சி மகிழ்தல் 02)

பிணிக்குத் தரப்படும் மருந்து நோயினின்று வேறுபட்ட இயல்பைக் கொண்டதாகவே இருக்கும். ஆனால் அந்தப் பெண், தான் தந்த நோய்க்குத் தானே மருந்தாக இருப்பதைச் சொல்லிச் சொக்க வைத்தார் வள்ளுவர். காதலில் வீழ்ந்த ஆடவனின் பிணி, பெண் அறியாதபோதும் தானாய் மயங்கியதால் வந்தது. அந்நோயின்பின் கனவும் இன்பமும் மகிழ்வுமென்று பலதரப்பட்ட உணர்வுகள் அலைமோதும்.

ஆனால் இறைவர் தேர்ந்தெடுத்துச் சோதித்த தொண்டரின் பிணி எத்தனைக் கடுமையானதென்று புரிந்திட அப்பரின் வாழ்வொன்றே போதுமானது. பொய்யாமொழிப் புலவர் காதல் மயக்கத்திற்காய்ச் சொன்னதை, இறையன்புக்காய் மாற்றிக் கையாண்டார் அப்பர்.

காதல் வாழ்வில், நோயுமாகி அந்நோய்க்கு மருந்துமானாள் ஏந்திழை. பத்திமை வாழ்விலோ, நோயைத் தந்து அந்நோயைத் தீர்த்தும் வைத்தார் ஆரூரர்.

அறமும் மறமும் வீரத்தைக் குறித்த மறம்

பாடலில், சைவ நெறியைப் பற்றும் வாய்ப்பை வாழ்க்கை தந்தபோதும் அந்த அறச்செயலைப் புறந்தள்ளி, ஆரூரர்தம் அருகிலில்லாது தீயவினையாம் மறத்தின் பக்கம் சாய்ந்த தம்முடைய அறிவில்லாச் செயலை அழுத்தமாகச் சுட்டி வருந்தினார் அப்பர். அறம் நற்செயலையும் மறம் தீச்செயலையும் குறிப்பன.

அறமும் மறமும் இணைந்தே வழங்கப்பெற்ற பழந்தமிழர் பாடல்களில், ‘மறம்’ என்ற சங்கச் சொல்லின் தேடல், தொடர்புடைய சுவைமிகு தகவல்களைப் பகர்ந்தது.

மறம் என்ற சொல்லுக்கு வீரமென்றும் வலிமையென்றும் பொதுவாகப் பொருள் கொள்வோம். ‘அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்’ என்று கழாத்தலையார் (புறநானூறு 62) சொன்னது நன்னெறிகளின் வழியில் ஆட்சி செய்து, வீரத்துடன் போரில் பொருத (போரிட்ட) வேந்தரை.

போரில் தாம் அம்பு விடுவதன்முன் பசுக்கள், பெண்டிர், பிணியுடையோர் என்று பாதுகாக்கப்பட வேண்டியோரை உரிய இடங்களில் அடைக்கலம் நாடுமாறு அன்புடன்

Koviloor Digital Library

மானம் உடைய தரசு (இறைமாட்சி 04)

என்று, அறம் வழுவாமல் அறமல்லாதவற்றை நீக்கி, மறமாம் வீரத்தில் குறைவில்லாத் தகைமையுடன் ஆட்சி செய்வதே அரசு என்று நல்லரசுக்கான விதிமுறையை உறுதிபடுத்தியது.

ஆனால் நம்முடைய நாவுக்கரசு, ஆரூர்ப் பதிகத்தில் சுட்டிய மறம் வீரமன்று.

அறிவித்த பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் பண்பு அறப்பண்பென்று, அறத்தை விரிவுபடுத்தினார் புலவர் நெட்டிமையார் (புறம் 09). இதனை, 'அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்' என்றார். இப்படி, அரசரைப் பொறுத்தமட்டில் குறையில்லாத நெறிகள் அறமென்றும் குன்றாத வீரம் மறமென்றும் தெளிவுபடுத்திய பாடல்கள் எண்ணிலடங்கா.

வள்ளுவமும்

அறனிழுக்கா தல்லவை நீக்கி
மறனிழுக்கா

தீச்செயலையும் குறித்த மறம்

அறமிருக்க மறத்தை நாடியதால் குற்ற உணர்வில் தவித்த நாவுக்கரசர், மறமென்று குறித்தது அறமல்லாத தீயவற்றை.

சங்கப் பாடல்களிலும் மறமென்ற சொல், வீரத்தை மட்டும் குறிக்கவில்லை. பாலை நிலத்தைக் கடந்தோரின் உடைமைகளைக் கவர்ந்த வேட்டுவர்/மறவரின் களவை, கொலைத் தொழிலெனும் மறச்செயலென்று குறித்தனர் தமிழர். அடிப்படையில், மறவரின் களவும் அதற்கு முன்னும் பின்னுமான கொலைகளும்

Koviloor Digital Library

மறமென்றே வழங்கப்பட்ட நிலையில், அச்செயலை வீரமென்று பயன்பட்டோர் போற்றிட கொலைத் தொழிலென்று இழந்தோர் அரற்றினர். இப்படித்தான், மறமென்ற சொல் வீரத்திற்கும் கொலைக்கும் ஆகிவந்ததென்று கொள்ளலாம்.

குறிஞ்சிக் கலியில் (கலித்தொகை 38) கபிலர், அறத்தையும் கொலைத் தொழிலாம் மறத்தையும் சுவையாக இணைத்து உவமை நயம் கூட்டிப் பாடினார். ஆனால், அப்பரைப் போல் எதிரெதிர்ப் பொருளிலல்ல.

தோழி எடுத்துச் சொன்னதன்பின் தலைவியை மணந்துகொள்ளத் தலைவன் ஆயத்தமாகக் காத்திருந்தான். இச்செய்தியைத் தலைவியிடம் கூறிய தோழி, தனக்கும் தலைவனுக்கும் இடை யிலான உரையாடலைப் பகிர்ந்தாள்

“மறம் திருந்தார் என்னாய் நீ மலை இடை வந்தக்கால்,

அறம் சாரான் மூப்பே போல் அழிதக்காள், வைகறை

திறம் சேர்ந்தான் ஆக்கம் போல் திருத்தகும்”

“அறம் சாராத முதுமைப்போல அழகும் தந்நிலையுமிழந்த தலைவி, கொலைத் தொழிலாம் மறத்தை விடாத கொள்ளையர்களைப் பொருட்படுத்தாது மலைகள் கடந்து நீ வந்ததில் தகுதியானவன் கையில் நிறைந்த வளத்தைப்போல் பொலிவுற்றாள்”, என்று தோழி தலைவனிடம் மொழிந்தாள். ஒரு தகவல் பகிர்வில்கூட எத்தனை உவமை இணைப்புகள்! ஒரு சொல்லின் பல பொருள் பயன்பாடுகளைத் தேடப் புகுந்தால், கிட்டும் செய்திகளில் திளைக்காமல் நகர்வது எவ்வாறு?

அதேபோல் கலித்தொகையின் மற்றுமொரு பாடலில்(52), ‘மறம் தலைக்கொண்ட நூற்றுவர் தலைவனைக் குறங்கு அறுத்திடுவான் போல்’ என்று, அறத்தை விடுத்து மறத்தைப் (தீயநெறி) பின்பற்றிய துரியோதனனின் தொடையை முறித்த வீமனைப் போல், புலியைக் கொன்றதாம் அழகிய யானையொன்று.

கம்பரின் பின்னாளைய இராமாயண வரிகளும் (சுந்தர காண்டம்:23), மறத்தைக் கொலைத் தொழிலென்னும் பொருளில் தருவது இங்கு ஒப்புநோக்கற்பாலது. இராவணனுடைய இலங்கையைக் குறிக்கையில் கம்பர், ‘கறங்குகால்புகா; கதிரவன்

Koviloor Digital Library

ஒளிபுகா; மறலி மறம் புகாது' என்று, காற்று நுழையாத, கதிரவனின் ஒளி புகாத, கூற்றுவனின் கொலைத்தொழில் புகாத இலங்கையென்றே சொன்னார்.

அப்பருடைய பாடலடிகள், பெரும் இலக்கியத் தேடலுக்கு வழிகாட்டும் வித்துக்கள் என்பது தெளிவு. ஆக, அப்பருக்கு முந்தைய படைப்புகளில், வீரத்தை மட்டும் குறிக்காமல் அறமல்லாதவை அனைத்தும் மறமென்று கொள்ளப்பட்டது புரியும். அறத்திற்கு எதிர்ப்பொருளாய் நாவுக்கரசர் மறத்தைச் சொன்னது, தீயபண்பெனும் பொருளில் புழங்கிய அதன் வழக்கின் தொடர்ச்சியே.

ஆரூரர் அருகிருக்கும் விதி

ஆரூரர் அருகிலல்லாது, பண்டெல்லாம் பிறசமயத்தர் சொல் கேட்டு வழி தவறி நின்றதை அறமல்லாச் செயலென்று பாடல் குறிக்கிறது. தாம் சிற்றினம் சேர்ந்ததும் பெரியோராம் சைவப் பற்றாளர்களின் துணைக் கோடாததும் அப்பரை நொந்து போகச் செய்தன.

பதினெண் கீழ்க்கணக்கின் நாலடியாரும் 'நல்லினம் சேர்தலைக்' குறிக்கையில்

அறிமின் அறநெறி; அஞ்சுமின் கூற்றம்;

பொறுமின் பிறர்கடுஞ்சொல்; போற்றுமின் வஞ்சம்;

வெறுமின் வினைதீயார் கேண்மை; எஞ்ஞான்றும்

பெறுமின் பெரியார்வாய்ச் சொல்

(நல்லினம் சேர்தல், நாலடியார், 18:2)

அறநெறி அறிதல், கூற்றத்தை அஞ்சல், பிறரது கடுஞ்சொல் பொறுத்தல், தீயோர் நட்பை வெறுத்து ஒதுக்குதல், எப்போதும் பெரியோர் அறவுரைகளைக் கேட்டலென்று வரிசைப்படுத்தியது.

Koviloor Digital Library

அப்பரின் பாடலைத் திரும்பிப் பார்ப்போம்

பெருகுவித்தென் பாவத்தைப் பண்டெலாங் குண்டர்கள்தஞ் சொல்லே கேட்டு

உருகுவித்தென் னுள்ளத்தி னுள்ளிருந்த கள்ளத்தைத் தள்ளிப் போக்கி

அருகுவித்துப் பிணிகாட்டி யாட்கொண்டு பிணிதீர்த்த வாரூ ரர்தம்

அருகிருக்கும் விதியின்றி அறமிருக்க மறம்விலைக்குக் கொண்ட வாறே

மறத்தின் பக்கம் சாய்ந்து அறத்தைத் தேராது புலம்பிய அப்பரின் பாடலில் தெரிவது, நாலடியாரின் அறிவுரைகளின் சாயலும் அவற்றைக் கடைப்பிடிக்காத புலம்பலும். ‘அறிமின் அறநெறி’ என்றே தொடங்கியது நாலடிப் பாடல். ‘வினைதீயார் கேண்மையை’ வெறுக்காமல் குண்டர்கள்தஞ் சொல்லே கேட்டார் நாவுக்கரசர்; அந்நிலையில், உள்ளத்தின் உள்ளிருந்த கள்ளத்தைத் தள்ளிப் போக்கியவர் இறைவரே; ‘பெரியாரின் அறவுரை கேட்டலை’ ஏற்காது, ஆரூரர் அருகிலிருக்கச் செய்த விதியைப் பற்றாமல் அறமிருக்க மறம்விலைக்குக் கொண்டார் அவர்.

மற்றுமொரு பதினென்கீழ்க்கணக்கு நூலான இன்னா நாற்பதில்

கள்ளுண்பான் கூறுங் கருமப் பொருளின்னா

முள்ளுடைக் காட்டி னடத்த னனி யின்னா

வெள்ளம் படுமாக் கொலை யின்னா வாங்கின்னா

கள்ள மனத்தார் தொடர்பு.

[இன்னா நாற்பது 33]

கள்ளுண்பான் கூறும் வினைப்பயன், முட்காட்டில் நடத்தல், வெள்ளத்தில் அகப்பட்ட விலங்கு கொலையாவதோடு, ‘கள்ள மனத்தார் தொடர்பு’ மிகவும் துன்பம் தரவல்லது என்றார் ஆசிரியர் கபிலர். இவர் சங்கக் கபிலருக்குப் பிந்தையவர்.

திருவாரூர்ப் பதிகம் முழுக்க, தீயோர் நட்பில் கலந்து செய்த தவறுகளையும் பட்ட துன்பங்களையுமே பட்டியலிட்டார் அப்பர். தீமையையும் தீயோர் நட்பையும் விட்டொழிப்பது அறவழி என்றவர் பாடினார்.

மறத்தை விலைக்குக் கொள்ளல்

Koviloor Digital Library

நாவுக்கரசர் தம் நிலையை, அறமிருக்க மறத்தை விலைக்குக் கொண்டதற்கு உவமையாக்கினார். அதென்ன மறத்தை விலைக்குக் கொள்வது?

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், கடையேழு வள்ளல்களில் ஒருவரான ஆய் அண்டிரனைப் பாடிய புறநானூற்றுப் பாடல் (புறம் 134)

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்

அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்,

பிறரும் சான்றோர் சென்ற நெறியென

ஆங்குப் பட்டன்று அவன் கைவண்மையே

என்றது. தடையின்றி மற்றவர்களுக்கு வாரி வாரி வழங்கிய மன்னர் அவர். அந்தக் கொடையை, இந்தப் பிறவியில் செய்தது மறுபிறவியில் பயன் தரும் என்று நினைத்துக் கொடுத்தாரா? அதுதான் இல்லை. தமக்கு முந்தைய பெரியோர் சென்ற சீரிய நெறியைப் பின்பற்றியே அவர் நற்பணிகளைச் செய்தாராம்.

பிறருக்கு வழங்கிய அறநெறியின் நோக்கம் மறுபிறவியின் பயனுக்காய் என்ற எண்ணத்தைப் பெரிதும் கடிந்து புறந்தள்ளியது சங்கத் தமிழர் நாகரிகம். அதனால்தான், அத்தகு எண்ணம் கொண்டோரை ‘அறவிலை வணிகர்’ என்று பழித்தார் புலவர்.

வடு அஞ்சி வாய்மொழிந்து,

தமவும் பிறவும் ஒப்ப நாடிக்

கொள்வதூஉம் மிகை கொடாது கொடுப்பதூஉங் குறைகொடாது

பல் பண்டம் பகர்ந்து வீசும்

(கடியலூர் உருத்திரங்கண்ணனார், பட்டினப்பாலை 208211)

பட்டினப்பாலையின் இவ்வரிகள், அவப்பெயருக்கு அஞ்சி உண்மையே விளம்பி, தம் பொருளையும் பிறர் பொருளையும் ஒன்றெனவே நோக்கி, வாங்குகையில் மிகுதியாக வாங்காமல் கொடுக்கையில் குறைவாகக் கொடுத்திடாத பண்புடை வணிகம் செழித்திருந்த சங்கத் தமிழகத்தை நமக்குக் காட்டும். இத்தகு மன்னில்தான், மறுமைப் பயனுக்காக இம்மையில் நல்வினையாற்றுவோரை அறத்தை விலைபேசும் வணிகரென்று கடிந்திடவியலும்.

இந்தச் சங்கச் சொல்லாடலின் சாரத்தை எடுத்துக் கொண்ட அப்பர், பத்திமையின் மாறுபட்ட

Koviloor Digital Library

உணர்வலைகளில் நெகிழ்ந்தவாறு புதிய வடிவத்தில் மொழிந்தார். அறமாம் நல்வினை கைக்கூடும் வாய்ப்பிருந்தபோதும், தீவினையின் பின்சென்ற தம் தேர்வை மறத்தை விலைக்குக் கொண்டதெனப் பகர்ந்து நொந்தார்.

நொந்தலும், நோதலும், செய்த தவறுக்காகத் தம் மேலே சினமும், ஆட்கொண்ட இறைவன்பால் பேரன்புமென்று உணர்வுகளின் பிழம்பாக நான்கு வரிப் பாடலொன்றை ஒளிரச் செய்வன நாவுக்கரசரின் அறம்வழுவாத நற்பண்பும் எல்லையில்லா இறையன்பும். ஆனால், பிழம்பினின்று வெளிவரும் பொறிகளைப்போலத் தெறித்துவிழும் சொல்லாடல்கள், அவருடைய இலக்கியப் பயிற்சியையும் அதைப் பத்திமையில் புகுத்தித் தொடர்ச்சிக்கு வழியமைக்கும் நாட்டத்தையும் காட்டுகின்றன.

நன்றி: டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி

நாலடியார் பாடல்கள்

துறவறவியல்

பாடல் 03

யானை எருத்தம் பொலியக் குடை நிழற் கீழ்ச்

சேனைத் தலைவராய்ச் சென்றோரும் ஏனை

வினை உலப்ப வேறாகி வீழ்வர்தாம் கொண்ட

மனையாளை மாற்றார் கொள.

விளக்கம்:

யானையின் பிடரியிலே அமர்ந்து எல்லாரும் காணுமாறு குடைநிழலில் படைகளுக்கெல்லாம் தலைவராகச் சென்ற அரசர்களும், தீவினை கெடுப்பதனால், முன்னிருந்த நிலையினின்றும் வேறுபட்டு, தம் மனைவியையும் பகைவர் கவர்ந்துகொண்டு போக, வறுமையில் வீழ்வர். (நல்வினை போய், தீவினை வருமானால் அரசரும் தாழ்வடைவர். எனவே, செல்வம் உள்ளபோதே அறம் செய்க என்பதாம்.)

Koviloor Digital Library

அன்புடைத் தோன்றல் பகுதி–3

நில்லு கண்ணப்ப!

இரா. கலைக்கோவன்,
இயக்குநர்,
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
வரலாற்றாய்வு மையம்,
திருச்சிராப்பள்ளி

சிவகோசரியார் முறையீடு

திருமறத்திலோ, திருத்தொண்டர் புராணத்திலோ கண்ணப்பர் இறைவனிடம், கோசரியார் வழிபாடு குறித்து ஏதும் பேசுவதோ, முறை யிடுவதோ இல்லை. அவருக்கு முன் இருந்ததை மாற்றுகிறார்; அவருக்குப் பிடித்ததைச் செய்கிறார், அவ்வளவுதான். ஆனால், கோசரியாரால் அப்படி அமைதியாக இருக்கக் கூடவில்லை. 'இவ்வாறு அருச்சனை செய்பவர் யாவர் கொல்'

என்று கேட்குமளவு வெகுளி அவரை ஆட்கொள்கிறது. கண்ணப்பர் நிகழ்த்துவன அனைத்தையும் பார்ப்பவர், அவர் சென்றதும் இறைவனிடம் முறை யிடுகிறார். 'உற்றது கேட்டருள் உன் தனக்கு அழகா?' எனத் தொடங்கும் அவரது முறையீடு, 'வேட்டுவன்

Koviloor Digital Library

செய்தவனவெல்லாம் உனக்கு இனியதா' என்ற கேள்வியுடன் முடிகிறது. இது திருமறம் காட்டும் காட்சி. ஆனால், புராணத்தில் கோசரியார் வேட்டுவரைக் காண்பதில்லை. 'இது செய்தார்தமைக் காணேன். உன்னுடைய திருவருளால் ஒழித்தருள வேண்டும்' என்பதே இறைவனிடம் அவர் வைக்கும் வேண்டுகோள்.

சிவபெருமான் விரும்பும் வழிபாடுகள்

கேட்டார்க்கும் கேளாதவர்க்கும் அழைத்தார்க்கும் அழைக்காதவர்க்கும் தேவைக்கேற்ப நேரில் தோன்றி அருள் செய்த சிவபெருமான் சிவகோசரியாருக்கு விடையிருக்க அவர் கனவில்தான் தோன்றுகிறார். 'பிறையணி இலங்கு பின்னு புன் சடைமுடிக் கறையணி மிடற்றுக் கனல் மழுத் தடக்கை நெற்றி நாட்டத்து நிறை நீற்றாக ஒற்றை மால்விடை உமையொடு மருங்கில்' சிவபெருமான் சிவகோசரியார் கனவில் தோன்றியதாகத் திருமறம் காட்ட, புராணம் 'மின்திகழுஞ் சடை மலி' சிவபெருமான் எழுந்தருளியதாகக் கூறுகிறது. சிவகோசரியாருக்குக் கண்ணப்பரை அடையாளம் காட்டி உணர்த்தவே அவரது கனவில் தோன்றுகிறார் சிவபெருமான். 'உரிமையில் சிறந்த நன் மாதவன்' என்ற அறிமுகத்துடன் தொடங்குபவர், கண்ணப்பரின் செருப்படியைத் தூவும் பூவாகவும் வாயைத் தூய பொற்குடமாகவும் அதில் தங்கும் நீரை கங்கையின் புனலாகவும் பற்களை நீரிலிட்ட மணிகளாகவும் நாவை நீரிலிடும் மலராகவும் மீசை முடிகளைத் தருப்பையினும் தன் தலைக்கு உகந்தனவாகவும் கண்ணப்பர் தம் தலையில் இருத்திக் கொணர்ந்த சருகிலையைக் கற்பக மலராகவும் அவர் இட்ட இறைச்சியோ நெய், பால், அவியென அனைத்துமாகவும் தமக்குத் தோன்றுவதாகக் கூறுமிடம் உன்னதமானது. 'இது எனக்கு, உனக்கு அவன் கலந்ததோர் அன்பு காட்டுவன் நாளை, நலந்திகழ் அருச்சனை செய்தாங்கு இரு' என அறிவுறுத்தி இறைவன் மறைகிறார். இறைவன் அருளியது கேட்ட அளவில் சிவகோசரியார் அறிவுற்றுத் தாம் கண்ணப்பர் வழிபாடு குறித்துப் பேசியதெல்லாம் நினைத்து மனம் கூசினார் எனத் திருமறம் கூறுமிடம் கவனிக்கத்தக்கது.

சேக்கிழார் சூட்டும் மகுடம்

புராணம் ஆறு பாடல்களை இறைவனின் மொழிதலுக்கு வழங்கியுள்ளது. கோசரியாரின் கனவில் தனியராகத் தோன்றும் சிவபெருமான், 'வன்திறல் வேடுவன் என்று மற்றவனை நீ

Koviloor Digital Library

நினையேல் நன்றவன் தன் செயல் தன்னை நாம் உரைப்பக் கேள்' என்ற முன்னறிவிப்புடன்தான் கண்ணப்பரைக் கோசரியாருக்கு அடையாளப்படுத்துகிறார். 'அவன் வடிவெல்லாம் நம் பக்கல் அன்பு, அவன் அறிவெல்லாம் நமையறியும் அறிவு, அவன் செயலெல்லாம் நமக்கினியவாம்'. என்றார். சிவபெருமான் தமக்கு உகந்த எந்த ஓர் அடியவர் குறித்தும் இத்தகு நன்மொழிகள் சொல்லி நாம் அறியோம். கண்ணப்பருக்குச் சேக்கிழார் சூட்டும் மகுடமிது.

நக்கீரரைப் போலவே சேக்கிழாரும் இறைவனே இருவகை வழிபாட்டு முறைகளையும் ஒப்பிட்டு அன்பு வழிபாட்டை உயர்த்துமாற்றை நன்கு வெளிப்படுத்தியுள்ளார். கண்ணப்பரின் செருப்படி இளம் பருவச் சேயடியின் சிறப்புடையதென்றும் அவர் வாய் உமிழும் புனல் கங்கையின் புனிதமானதென்றும் அயனொடு மால் தேவர் வந்து சூட்டும் மலர்கள்கூட கண்ணப்பர் இடும் மலர் போல் ஆகாதென்றும் மறை வேள்வியோர் தந்த அவியினும் கண்ணப்பரிட்ட ஊன் தமக்கு இனியதென்றும் மறைமொழிகள், தோத்திரங்கள், மந்திரங்கள் இவற்றினும் கண்ணப்பரின் அறிவுறா மொழி நல்லதென்றும் கூறும் இறைவன் சடங்குகளைவிட

அடியவர் அன்பையே தாம் உகப்பதாக நிறுவுமிடமிது.

குருதி வழிதலும் கண்ணப்பர் செயல்களும்

இறைவன் கண்ணில் குருதி வழிய அதைக் கண்ணுறும் கண்ணப்பரின் செயல்கள் திருமறத்திலும் புராணத்திலும் சற்றே மாறுபட்டுள்ளபோதும் அடிப்படையானவையாக வருந்திச் செயலிழத்தல், செய்யத்தகுவன நினைந்து முயலுதல், கண்ணிடந்து அப்புதல் எனும் மூன்றையும் குறிக்கலாம். வருந்திச் செயலிழந்து அதனின்றும் மீண்டநிலையில் இறைவன் கண்ணில் குருதி வழியச் செய்தவர் யாரெனத் தேடி, அறியமுடியாததால், பச்சிலைகள் பறித்துப் பிழிந்தும் குருதி நிற்காமையின், கண்ணிடந்து அப்பும்

Koviloor Digital Library

முடிவுக்கு வருகிறார் கண்ணப்பர். 'இதனைக் கண்ட என் கண்தனை இடந்து கடவுள் தன் கண்ணுறு புண்ணில் அப்பியும் காண்பன்' என்று பரிசோதனை முயற்சியாகவே கண்ணகழலைக் காட்டுகிறது திருமறம். ஆனால், புராணமோ பச்சிலை மருந்துகள் குருதியை நிறுத்தாநிலையில் 'உற்றநோய் தீர்ப்பது ஊனுக்கு ஊன்' எனும் உரை அவர் முன் வந்து நின்றதாகக் குறிப்பிடுகிறது. அந்த அனுபவ மொழியே 'இதற்கினி என் கண் அம்பால் இடந்தப் பின் எந்தையார் கண் அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும் அடுக்கும்' என்று அவரைக் கண்ணிழக்கத் தூண்டுகிறது.

புராணக் கூற்றுப்படி, இறைவனின் வலக் கண்ணில் குருதி வழியக் கண்ணப்பர் தம் ஒரு கண்ணை இடந்து அங்கு இடக் குருதி நின்றது. கண்ணப்பர் தம் தீர்வின் நல் முடிவு கண்டு மகிழ்ந்து கூத்தாடினார். ஆனால், அம்மகிழ்வு நீடிக்காதபடி இறைவன் தம் இடக்கண்ணில் குருதி பெருகச் செய்தார். கண்ணப்பர் திடுக்கிட்டுத் துன்புற்றாலும் தம் கையில் மருந்திருப்பது உணர்ந்த நிலையில் மறு கண்ணை அகழத் துணிகிறார். அகழ்ந்து அதைப் பொருத்த, இரு கண்ணும் இழந்து பார்வையற்ற நிலையில் தடுமாற்றம் கூடாதென்றே தம்பிரான் திருக்கண்ணில் இடக்கால் ஊன்றித் தம் கண்ணை அகழ, அம்பினைக் கண்ணில் ஊன்றுகிறார். உடன் இறைவன் தம் திருக்கையால் கண்ணப்பர் முயற்சியைத் தடுக்கிறார்.

கல்லாடரின் திருக்கண்ணப்ப தேவர் திருமறமும் இறைவன் இரண்டு கண்களிலும் குருதி வழியச் செய்ததாகவே சொல்கிறது. ஆனால், நக்கீரரின் திருமறமோ இறைவனின் ஒரு கண் குருதிக்கே கண்ணப்பர் தம் இரண்டு கண்களையும் இழக்கத் துணிந்ததாகக் கூறுகிறது. ஒரு கண் இடந்து அப்பியதும் குருதி நிற்பது கண்டு மகிழ்ந்து அதை முற்றிலுமாய்ச் சரி செய்யும் நோக்குடன் மறு கண்ணையும் அகழக் கண்ணப்பர் முயல, எழிற் சிவலிங்கம் தன்னிடைப் பிறந்த தட மலர்க் கையால் அன்னவன் கை அம்பொடும் அகப்படப் பிடித்து அருளியதாக மறம் கூறுகிறது.

கைப்பிடித்தலும் கூற்றும்

கைப்பிடித்த முறையிலும் உடன் நிகழ்ந்த கூற்றிலும்கூடக் கண்ணப்பர் வரலாறு பேசும் மூன்று இலக்கியங்களும் மாறுபட்ட மொழிவுகளைத் தருகின்றன. இறைவன் தம் ஒரு கையால் கண்ணப்பரின் இரு கைகளையும் பற்றியதாகக் கூறும் கல்லாடர், 'ஒல்லை நம் புண் ஒழிந்தது பாராய்' என்பதையே இறைவன் கூற்றாக

Koviloor Digital Library

முன் வைக்கிறார். நக்கீரரோ அந்நிகழ்வை நாடகம் ஒன்றின் உச்சக் காட்சிக்குரிய அனைத்துத் தகுதிகளுடனும் படைத்துள்ளார்.

கண்ணப்பர் இரண்டாம் கண்ணை அகழும் நோக்குடன் அதில் கணை பதித்த அளவிலேயே, இறைவன் குரல் கொடுக்கிறார். 'நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப'. மூன்று முறை கண்ணப்பரின் பெயரைத் தம் திருவாயால் மொழிந்து, தம் அன்புடைத் தோன்றல் எனும் தகுதியையும் அவருக்கு வழங்கி, கண் அகழ்தலை நிறுத்துமாறு கூறும் இறைவனின் இந்தத் தடுத்தாட்கொண்ட பாங்கு சுந்தரர் உள்ளிட்ட எந்த ஒரு திருத்தொண்டருக்கும் வாய்க்காத பேரருளாகும். கூற்று நிகழ்ந்து கொண்டிருக்கும்போதே சிவலிங்கத்திலிருந்து வெளிப்படும் கை கண்ணப்பரின் கையை அம்பொடும் அகப்படப் பிடித்து அருள்கிறது. திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் திருமறத்தை உள்வாங்கியவராய்ச் செயல்படுகிறார். இரண்டாம் கண்ணை அகழும் நோக்குடன் கண்ணப்பர் அம்பினைத் தம் கண்ணில் ஊன்றியதுமே இறைவனுக்குப் பொறுக்கக்கூடவில்லை. அவரது திருக்கை வெளிப்பட்டுக் கண் இடக்கும் கண்ணப்பர் கையைத் தடுக்க, 'கண்ணப்ப நிற்க' என்ற கூற்று வெளிப்பட்டது. கல்லாடரும் சேக்கிழாரும் இறைவன் கண்ணப்பரின் கைகளைப் பற்றிய பிறகே கூற்று நிகழ்ந்ததாகக் கூற, நக்கீரர் கூற்றை முதலில் வைத்துக் கைத்தடுப்பு உடன் நிகழ்வானதாகச் சுட்டுகிறார்.

வலம் நிற்க எனல்

கல்லாடரும் நக்கீரரும் காட்டாத ஒரு காட்சியைச் சேக்கிழார் படம் பிடிக்கிறார். கண் இடந்து அப்பக் கண்ணப்பருக்கு உதவிய கையைத் தம் கையால் பற்றிக்கொண்ட இறைவன், 'என் வலத்தில் மாறிலாய் நிற்க' என்று அவருக்கு அருள் செய்தார். தம் இடப்பகுதியை அம்மைக்குத் தந்த நிலையில் கண்ணப்பர் வலம் நிற்பதுதானே முறை. அறுபத்து மூவரில் எவரும் பெற்றிடாத உயர்நிலை இது என்பதால்தான், 'பேறினி இதன் மேல் உண்டோ?' என்று சேக்கிழாரே கேட்க முடிகிறது.

பெரிதினும் பெரிதானவர்

ஆறாம் நூற்றாண்டுப் பத்திமை இலக்கியங்களிலேயே வெளிப்படும் பேறு பெற்ற மிகச் சில சிவனருட் செல்வர்களுள் கண்ணப்பர்

Koviloor Digital Library

ஒருவராவார். தமக்கென்று தனித்த நிலையில் இலக்கியங்கள் பெற்ற மூன்று சிவனருட் செல்வர்களுள் அவரும் ஒருவர். அம்மூவருள்ளும் இருபெரும் புலவர்களால் பாடப்பெற்ற பெருமைக்குரிய ஒரே திருத்தொண்டர் அவர்தான். தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் பல்லவர் காலத்தில் இருந்து தொடர்ந்து இடம்பெற்று வரும் விரல் விட்டு எண்ணக்கூடிய நாயன்மார்களுள் அவரும் ஒருவராவார்.

தம் அடியார்களின் உயர் தனிப் பத்திமை வெளிப்படுத்த இறைவனால் மிகக் கடுமையாகச் சோதிக்கப்பட்ட சிலருள் கண்ணப்பரும் ஒருவர் என்பது அவரது பெருமை. எல்லாவற்றிற்கும் மேலாகக் கண்டபாதம், வேதிபாதம், தூண், சுவர், தோரண வளைவு, வலபி, கபோதக்கூடு, ஆரஉறுப்பு, கிரீவகோட்டம் எனக் கோயில் கட்டுமானத்தின் தாங்குதளத்திலிருந்து கூரைவரையிலான அனைத்து உறுப்புகளிலும் பரவலாக இடம்பெற்ற ஒரே அருளாளராகவும் அவரை மட்டுமே குறிப்பிட முடிகிறது.

நிறுவனப்படுத்தப்பட்ட தொழில்சார் வழிபாட்டு முறைக்கும் அன்பின் வழியான இயல்புநிலை வழிபாட்டு முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை முன்னிருத்தித் தீர்வுகாணும் நோக்கில் கண்ணப்பரின் வாழ்க்கையை இலக்கிய ஆசிரியர்கள் கையாண்டிருக்கும் பாங்கு இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் ஒளிர்கிறது. இதுவும் வேறெந்தத் தொண்டருக்கும் வாய்க்காத வாய்ப்பு என்பதுடன், இலக்கியங்களில் வரலாறு எப்படியெல்லாம் ஆழ உழுது விதைக்கப்படுகிறது என்பதையும் காட்டுவது காண்க.

பார்வை நூல்கள்

1. பதினோராந் திருமுறை, சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை, 1990.
2. திருத்தொண்டர் புராணம், திருப்பனந்தாள் திருமடப் பதிப்பு, 1982.
3. தேவாரம் அடங்கன்முறை, இரண்டு பாகங்கள், மயிலை இளமுருகனார் பதிப்பு, 1953.
4. இரா. கலைக்கோவன், நில்லு கண்ணப்ப, தினமணி, 14. 4. 1991.
5. இரா. கலைக்கோவன், இராஜராஜீசுவரம் சில புதிய தகவல்கள், தினமலர், 27. 12. 1994.

Koviloor Digital Library

(திருவிளையாடற் புராணம் தொடர்)

ஆடலுக்கு ஆட்படுவோம்

தலம் தீர்த்தம் மூர்த்தி இவற்றின் சிறப்புகள்

பகுதி-9

காசி ஸ்ரீ முனைவர்
நா.ரா.கி.காளைராசன்
(மேனாள் துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம்)

மதுரையை ஆண்ட மலையத்துவச பாண்டியனின் மகளாகத் தடாதகைப் பிராட்டியார் தோன்றி ஆட்சி செய்தார். உலக உயிர்களுக்கெல்லாம் தாயானவள்; அவள் ஆட்சி செய்த காரணத்தினால் பாண்டிய நாடே உலக உயிர்களுக்கெல்லாம் தாய்நாடு ஆனது. அன்னை பேசிய தமிழ்மொழியே தாய்மொழி ஆனது. பாண்டிய நாட்டின் சிறப்பையும், அன்னை தடாதகையை மணந்து மதுரையின் மன்னனாகி நம்மை எல்லாம் ஆண்டருளும் அந்த சோமசுந்தரக் கடவுளின் திருக்கயிலாயச் சிறப்புகளையும், திருவிளையாடற்புராணம் எடுத்துரைக்கின்றது.

தல விசேடம்

நாட்டமொரு மூன்றுடைய நாயகனுக் கன்புடையீர் நயந்து நீவிர்
கேட்டதல மீண்டுரைத்த திருவால வாயதனுட் கிளைத்துப் பொன்னந்
தோட்டலர்தா மரைமுளைத்த தொருதடமுஞ் சுந்தரச்செஞ் சோதி ஞான
ஈட்டமென முளைத்தசிவ லிங்கமுமொன்று முளவின்னு மிசைப்பக் கேண்மின்.

மூன்று கண்களையுடைய சிவபெருமானிடம் அன்பு நிறைந்தவர்களே! நீங்கள் விரும்பிக் கேட்ட திருத்தலம் திருவாலவாய்.

Koviloor Digital Library

சிறப்பு; அவற்றுள்ளும் பதினாறு தலங்கள் சிறப்பு; அதிலும் சிதம்பரம், காசி, காளத்தி, திருவாலவாய் ஆகிய நான்கும் சிறப்பு. இந்த நான்கினும் திருவாலவாய் அதிகச் சிறப்புடையது. எப்படியென்றால், சிதம்பரம் தரிசிக்க முத்தி; காசியில் இறக்க முத்தி; காளத்தியைப் பூசிக்க முத்தி; திருவாலவாய் என்ற பெயரைக் கேட்டவுடனே இகபர போக மோட்சங்களைக் கொடுக்கும்.

மற்றபிற சிவத் தலங்களை உண்டாக்குவதற்கு முன்பே சிவபெருமான் இந்தத் திருவாலவாய் திருத்தலத்தை உண்டாக்கி அதில் வாசம் செய்து அருளினார். அதனால் திருவாலவாய் எனக் கேட்டவர்கள் அறத்தைப் பெறுவார்கள். திருவாலவாய் என்று தியானித்தவர்களே பொருளைப் பெறுவர். திருவாலவாயில் சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்தவர்கள் இன்ப நலத்தைப் பெறுவர். திருவாலவாயில் வசிப்பவர்கள் மோட்சத்தைப்

அத்தலத்தில் பொன்தாமரை முளைத்த ஒரு தடாகமும், அழகிய சிவந்த சோதி மயமாகிய ஞானம் அருளும் சிவலிங்கம் ஒன்றும் இருக்கின்றது.

எல்லா உலகங்களிலும் உள்ள புண்ணியத் தலங்கள் சிறப்புடையன; அந்தப் புண்ணியத் தலங்களில் சிவத்தலங்கள் சிறப்பு; அவற்றிலும் அறுபத்தெட்டுச் சிவத் தலங்கள்

Koviloor Digital Library

பெறுவர்.

கங்கைநதிக் கரையில் உள்ள காசி திருத்தலமானது, ஒருவர் உயிருடன் இருக்கும்போதே, கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம் ஆகியவற்றின் மூலம் சமநிலையை அடைந்து வாழும் ஜீவன் முக்தியைக் கொடுக்கும். அதன் பின்னர் ஜீவன் முக்தர்கள் தங்கள் உடலை நீத்த பிறகு, விதேக (உடல் அற்ற) முக்தி என்ற மறுபிறவி இல்லாத முக்தியைக் கொடுக்கும். திருவாலவாயில் வசிப்பவர்கள் மோட்சத்தைப் பெறுவர். இந்த மகிமையால் திருவாலவாய்க்கு நிகரான தலங்கள் எந்த உலகத்திலும் இல்லை.

இந்தத் தல மகிமையை முழுமையாகச் சொல்ல வல்லவர் ஒருவருமில்லை. வேறு தலங்களில் யாகங்கள், தானங்கள் செய்த பலனும், காசி முதலிய தலங்களில் வாசம் செய்த பலனும், புண்ணிய நதிகளில் தீர்த்தமாடிய பலனும், இந்தத் திருவாலவாயில் எப்போதும் வாசம் செய்கிறவர்களுக்குக் கிடைக்கும். பிரம்மஹத்தி, கள்ளுண்ணுதல் முதலிய கொடும் பாவங்களெல்லாம் இந்தத் தலத்தில் வந்து வசித்தால் தீரும்.

இந்தத் தலத்தில் ஒரு சோமவார விரதம், மகா சிவராத்திரி விரதம் இருந்தால் வேண்டியவரம் கிடைக்கும். இந்தத் தலத்தில் பிராமணருக்கு ஒரு சுயம்பாகமும், தவசிகளுக்கு ஏதேனும் பிச்சையும் கொடுத்தால், மகா தான பலனைப் பெறுவார்கள். இந்தத் தல மகிமையைத் தெரிந்து கொள்பவரின் இரு வினைகளும் ஒழியும். ஆகையால் இந்தத் தலத்திற்குச் சென்று வாசம் செய்ய வேண்டும்.

இத்தலப் பெருமைகளை முழுமையாகச் சொல்ல வல்லவர்கள் யார்? இந்தத் தலத்துக்குப் பெயர் சிவநகரம், கடம்ப வனம், ஜீவன்முத்திபுரம், கன்னிபுரம், திருவாலவாய், பூலோக சிவ லோகம், சமஷ்டி விச்சாபுரம், கூடல், துவாத சாந்தத் தலம் என்ற காரணப் பெயர்கள் உண்டு. இவ்வாறாக இத்தலத்தின் சிறப்புகளை அகத்திய முனிவர் அருளிச் செய்தார். அடுத்து தீர்த்த விசேடத்தை சொல்லத் தொடங்கினார்.

தீர்த்த விசேடம்

கண்ணகள் குடுமி மாடக்
கடிபொழி லால வாயின்

அண்ணலம் பெருமை யாரே
யளப்பவ ரவிர்தண் முத்த

வெண்ணகை யுமையா ளன்பு
விளைமுகச் செவ்வி போலத்

தண்ணறுங் கமலம் பூத்த
தடப்பெருந் தகைமை சொல்வாம்.

Koviloor Digital Library

செய்வதற்காகச் சோமசுந்தரக் கடவுள் தாமே உருவாக்கிய தீர்த்தம் இந்தத் பொற்றாமரைக் குளம் ஆகும். இந்திரனும், பிரமனும், விஷ்ணுவும் நந்திதேவர் முதலான தேவர்கள் அனைவரும் மதுரை அருள்மிகு சோமசுந்தரக் கடவுளை வணங்கி, சுவாமி! தாங்கள் எழுந்தருளியுள்ள இந்தச் சுயம்பு லிங்கத்திற்கு அபிஷேகம் பண்ணவும், அடியார்களாகிய நாங்கள் அனைவரும் தீர்த்தமாடவும் தீர்த்தம் ஒன்று வேண்டுமென வேண்டிக் கொண்டனர். அது கேட்ட சிவபெருமான், சிவலிங்கத்துக்குத் தென்கிழக்கே தனது முத்தலைச் சூலத்தை ஊன்றினார். அது பாதாளம் வரை பாய்ந்தது. அதிலிருந்து கடல் அளவு தண்ணீர் பெருகியது. சிவபெருமான் அதைத் தனது திருக்கரத்தால் தடாகமாக அமைத்தார்.

அந்தத் தடாகத்தில், தனது சடையிலிருந்து தெய்வீகமான தீர்த்தத்தைத் தூவிக் கலந்தார். எல்லாத் தீர்த்தங்களும்

அகன்ற அகழியும், கலசங்கள் பொருந்திய கோபுரங்களும், நறுமணம் தங்கிய சோலைகளும் திருவாலவாயைச் சூழ்ந்துள்ளன. இத்தலத்தில் முத்துப் போன்ற புன்னகையை உடைய மீனாட்சிதேவியின் அன்பு விளைகின்ற திருமுகத்தின் அழகு பொருந்திய பொன்னிறமான தாமரைமலர் பூத்த தீர்த்தத்தின் பெருமையைச் சொல்கின்றோம்.

கங்கை, காவிரி முதலிய நதிகளும், ஆற்று நீர், ஊற்றுநீர், மேகநீர் கூடிய கடலும் மற்ற தீர்த்தங்களும் மேகங்களும் உண்டாவதற்கு முன்னே, தன்னை அபிஷேகம்

Koviloor Digital Library

தோன்றுவதற்கு முன்னர் இந்தப் பொற்றாமரைத் தீர்த்தம் உண்டானதால் ஆதி தீர்த்தம் என்றும், பரம தீர்த்தம் என்றும், இதில் மூழ்கினோர் நல்ல மங்கலத்தைப் பெறுதலினால் சிவதீர்த்தம் என்றும், ஞானத்தைத் தருதலால் ஞானதீர்த்தம் என்றும், மோட்சத்தைத் தருதலால் மோட்ச தீர்த்தம் என்றும் இதற்குப் பெயர்கள்.

தேவதேவனாகிய சிவபெருமான் தாமும் அதில் மூழ்கிக் கணங்களையும் மூழ்குவித்துச் சுயம்புலிங்கமாகிய அந்தப் பரிசுத்த லிங்கத்தில் பிரவேசித்தார். அப்படிப்பட்ட பெருமையினாலே நந்திதேவர் முதலானோர் விதிப்படி இந்தத் தீர்த்தத்தினால் சோமசுந்தரக் கடவுளின் திருமுடிமேல் அபிஷேகம் செய்து பூசித்தனர்.

தீர்த்தத்தில் முழுகிக் கரை யிலிருந்து தருப்பணம், விரதம், பூசை, தானம், தருமம், ஓமம், தவம், செபம், தியானங்கள் செய்தால் கோடி மடங்கு பலன் உண்டாகும். ஜன்ம நக்ஷத்திரத்தில் அந்தத் தீர்த்தத்தில் முழுகினால் பிறவிப்பிணி ஒழியும். விரதம் மேற்கொண்டு, விடாமல் ஒருவருஷம் இதில் முழுகி அங்கயற் கண்ணியையும் சோமசுந்தரக் கடவுளையும் பூசித்தால் மலட்டுத் தன்மை நீங்கி நல்ல பிள்ளைப்பேறு உண்டாகும்.

சுவாமியின் சடையில் இருக்கிற கங்கா தீர்த்தம் கலந்த காரணத்தினாலே பொற்றாமரைத் தீர்த்தத்திற்குச் சிவகங்கை என்றும், எல்லாத் தீர்த்தங்களுக்கும் உத்தமமாய் விளங்குதலினாலே உத்தம தீர்த்தம் என்றும், பொன்னிறமான தாமரை மலர்ந்த காரணத்தினாலே பொற்றாமரை என்றும், தருமத்தைக் கொடுப்பதினாலே தரும தீர்த்தம் என்றும், அருத்தத்தைத் தருகின்ற காரணத்தினாலே அருத்த தீர்த்தம் என்றும், காமத்தை ஈவதினாலே காமதீர்த்தம் என்றும், மோட்சத்தை அருளுவதால் மோட்ச தீர்த்தம் என்றும் விளங்கும். இந்தத் தீர்த்தச் சிறப்புகளைச் சொல்லக் கேட்டவர்கள் யோகமும் மோட்சமும் பெறுவார்கள்.

மூர்த்தி விசேடம்

ஆலவா யலர்ந்த செம்பொ னப்புயப் பெருந்தீர்த் தத்தின்

மேலவாம் பெருமை தன்னை விளம்புவா ரெவரே யங்கண்

நீலமா மிடற்று முக்க னிராமய னறிவா னந்த மூலமா

விலிங்க மேன்மை முறையினா லறைய லுற்றாம்.

அந்தத் திருவாலவாயில் பெருமை பொருந்திய மூல லிங்கத்தின் மேன்மையையும் முறையினால்

Koviloor Digital Library

சொல்வோம்.

மஹாமேருவும், வெள்ளிமலையும், மந்தரமும், கேதாரமும், காசியும் ஆகிய தலங்களில் லிங்கங்கள் உண்டாகுமுன்னே, இங்கே கடம்ப விருட்சத்தின் அடியிலே உண்டானது இந்த சிவலிங்கம். பின்பு இதிலிருந்து கிளைகள்போல மற்றபிற சிவலிங்கங்கள் உண்டாயின. இந்த இரண்டு காரணத்தினாலும் இந்தத் திவ்வியமான லிங்கம் மூலலிங்கம் என்ற பெயருடன் பிரகாசிக்கும்.

சோமசுந்தரர் என்ற காரணப் பெயர்

முப்பத்திரண்டு இலட்சணங்களும் கூடிய அழகுடன் விளங்குகின்ற இந்தச் சுயம்பு லிங்கத்தைக் கண்டு, அதற்குச் சோமசுந்தரப் பெருமான் என்று தேவர்கள் திருநாமம் இட்டனர். உலகமெல்லாம் வியாபித்துள்ள கடவுளாகியவர் சோமசுந்தரர். ஆதலாலே, அரிமர்த்தனபாண்டியன் கைப்பிரம்பால் அடித்தது அனைவர் மீதும் பட்டது. அந்தப் பரமசிவன் இந்தத் தலத்திலே அறுபத்துநான்கு தி ரு வி ளை ய ா ட ல் க ளை நிகழ்த்தியுள்ளார். ஆதலால் இத்தலத்திற்குச் சமமான தலம் எந்த உலகிலும் இல்லை.

தி ரு வ ா ல வ ா ய ா னு டை ய திருநாமத்தைக் காதால் கேட்டாலும், மனதில் நினைத்தாலும், நேரில் தரி சித்தாலும் முன் பிறவிகளில் செய்த பாவங்கள் எல்லாம் தீரும். பஞ் சாமிர்தம், பஞ்சகௌவியம், தேன், பழம், சந்தனம் முதலியன கலந்து அபிஷேகம் செய்து, விதிப்படி பூசித்தவர்களின் பாபங்கள் எல்லாம் தீரும். திருவமுது நிவேதனம் செய்வோர் சிவலோகத்தை அடைந்து நிறைந்த போகத்துடன் வாழ்வார்கள். கற்பூரதீபம் கொடுப்பவர்கள் சிவசாரூபத்தைப் பெறுவார்கள். சோமசுந்தரக் கடவுள் சந்நிதி முன்னர் பல வாத்தியங்களும் ஒலிக்க, ஆடல்பாடல் செய்விப்பவர்கள் செல்வக்களிப்பை அடைந்து இராஜபோகத்தைப் பெறுவார்கள்.

இந்த லிங்கத்தின் பெருமைகளை யாரால் சொல்லிட முடியும். எனக்குத் தெரிந்தளவு சிறிது சொன்னேன் என்கிறார் அகத்திய முனிவர். இந்தத் தலத்துக்கு ஒப்பான ஒரு தலமும், இந்தத் தீர்த்தத்துக்கு ஒப்பான ஒரு தீர்த்தமும், இந்த லிங்கமூர்த்திக்கு ஒப்பான ஒரு மூர்த்தியும் மூன்று உலகங்களிலும் இல்லை.

அந்தச் சுயம்பு லிங்கத்தின் திருநாமங்கள்: கருப்பூர சுந்தரன். கடம்பவன சுந்தரன், கலியாண சுந்தரன், அபிராம சுந்தரன், சண்பக சுந்தரன், மகுட சுந்தரன், மான்மத சுந்தரன். பழியஞ்சு சுந்தரன், சோம சுந்தரன், ஆலவாய்ச் சுந்தரன், நான்மாடக்கூடல் நாயகன், மதுராபுரேசன், சமஷ்டி இச்சாபுர நாதன், ஜீவன் முத்திபுர நாதன், பூவுலக சிவலோக அதிபன், கன்னி

Koviloor Digital Library

புரேசன், மூல லிங்கம் என்ற காரணப் பெயர்கள் மதுரை சோமசுந்தரேசுவர லிங்கத்திற்கு உண்டு. இன்னும் அந்த லிங்கத்துக்கு அநேகம் திருநாமங்களுண்டு.

அந்த லிங்கத்தில் ஆதாரமாக அமர்ந்து அறுபத்துநான்கு திருவிளையாடலையும் சிவபெருமான் நிகழ்த்தி அருளிச் செய்துள்ளார். அவற்றை எங்கள் ஆசாரியனாகிய முருகக்கடவுள் சொன்னபடியே நான் உங்களுக்குச் சொன்னேன் என்று அகத்தியர் முனிவர்களிடம் சொன்னார். அந்த அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் எங்களுக்கு விரிவாகச் சொல்லவேண்டும் என்று கைகுவித்து முனிவர்கள் கேட்டனர்.

பதிகம் என்பது நூலுக்கு முன்னுரை போன்றது. பதிகத்தில் 64 திருவிளையாடல்களின் தலைப்புகளைப் பட்டியலிட்டுப் பரஞ்சோதி முனிவர் அறிமுகம் செய்து வைக்கிறார். முதலாவது காண்டமாகிய மதுரைக் காண்டம் தேவேந்திரனுடைய பழியைத் தீர்த்த திருவிளையாடல் தொடங்கி, 18ஆவது திருவிளையாடலாகிய வருணன் ஏவிய கடல்நீர் வற்றும்படிச் செய்த திருவிளையாடலுடன் முடிகிறது. இரண்டாவது காண்டமாகிய கூடற்காண்டம் 19 ஆவது திருவிளையாடலான நான்மாடக்கூடல் ஆன திருவிளையாடல் தொடங்கி, 48ஆவது திருவிளையாடலான நாரைக்கு முத்தியை அருளிச் செய்த திருவிளையாடலுடன் முடிகிறது. மூன்றாவது காண்டமாகிய திருவாலவாய்க் காண்டம் 49ஆவது திருவிளையாடலான நாகம் எல்லைகாட்டின திருவிளையாடல் தொடங்கி, இறுதித் திருவிளையாடலாகிய வன்னிமரம், கிணறு, லிங்கம் இம்மூன்றையும் அழைத்து, வணிகமகளைக் காத்து அருளிய திருவிளையாடலுடன் திருவிளையாடற் புராணம் முடிவடைகிறது. மொத்தம் 64 திருவிளையாடல்களும் இந்தப் பதிகம் பகுதியில் தொகுதியாகத் தொகுத்து உரைக்கப்பட்டுள்ளன.

சோமசுந்தரக் கடவுளுடைய திருவடிகளைத் தியானித்து அளவில்லாத ஆனந்தம் மேலிட அகத்தியர் அருளிச் சொன்ன 64 திருவிளையாடல்களையும் வரும் இதழ்களில் வரிசையாகக் கற்போம்.

தொடரும்

Koviloor Digital Library

காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம் - பாடல் 30

சச்சிதானந்த மூர்த்தி

- வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

இறைவன் பேய்க்கோலம் கண்டு எள்ளி நகையாடுவதைச் சொன்ன அம்மையார், மீண்டும் அந்தக் கோலத்தையே எண்ணிப் பார்க்கிறார். அவன் என்பை அணிந்து பேய்களோடு ஆடுகிறான். ஆடும் இடமாவது பார்க்க அழகாக இருக்கக் கூடாதா? மயானத்திலே தீயில் ஆடுகிறான். பேய்கள் நள்ளிரவில் ஆடும். அவனும் இரவில்தான் ஆடுகிறான். “நள்ளிரவில் நட்டம் புரிந்தாடும் நாதனே’ என்று மாணிக்கவாசகரே சொல்கிறார். எல்லாம் ஒரே பயங்கரமான சூழ்நிலை.

“இப்படி ஆடுகிறானே, எதற்காக? அவனுக்கு இவ்வளவும் சிறுமையல்லவா? நாம் இப்படி எல்லாம் நினைக்கிறோம்.

அம்மையார் அவன் பெருமையை உடையவன் என்று சொல்கிறார். அந்தப் பெருமை அவனிடத்தில் ஈடுபட்டு அன்பு செய்பவர்களுக்குத்தான் தெரியுமாம். பிறருக்குத் தெரியாதாம்.

அப்படிப் பெருமையுடையவர் இப்படி ஏன் செய்ய வேண்டும்?

இறைவன் சோதி வடிவானவன். அவன் நெருப்பாகவும் நிற்பான். அவனுடைய அம்சம் பெற்ற ருத்திரமூர்த்தி ஒருவரைக் காலாக்கினி ருத்திரர் என்று சொல்வார்கள்.

அக்கினி எல்லாவற்றையும் அழிப்பது; தூய்மைப்படுத்துவது;

Koviloor Digital Library

தேவர்களை நோக்கி வழங்கும் ஆகுதிகளே அக்கினியில் பெய்கிறார்கள்.

அத்தகைய தூய்மையையுடைய அக்கினி எந்த இடத்தில் இருந்தாலும் தூய்மை கெடுவதில்லை. மயானத்தில் இருந்தாலும், சமையலறையில் இருந்தாலும், வேள்விக்குண்டத்தில் இருந்தாலும் அக்கினி அக்கினிதான். அது என்றும் தூய்மை உடையது.

அந்த அக்கினியில் இறைவன் ஆடுகிறான். அந்த அக்கினி அவனை நீறாக்குவதில்லை; சுடுவதே இல்லை. தூய்மையை உடையது. அக்கினியில் அழுக்குச் சார்ந்தாலும் அழகு சார்ந்தாலும் இரண்டையும் அது நீறாக்கிவிடும். அழுக்கினால் அது அழுக்காவதில்லை. அழகினால் அது அதிக அழகு பெறுவதில்லை. அக்கினியைத் தேஜஸ் (தேயு) என்றுசொல்வார்கள். தேவர்களுக்கெல்லாம் வாயாக இருப்பது அது. அதனால்

இந்த அக்கினி பௌதிக அக்கினி; அதாவது பஞ்சபூதங்களில் ஒன்றான அக்கினி. இறைவனே எல்லாவற்றுக்கும் மேலான தேஜஸ் ஆக இருப்பவன். சர்வப் பிரளயகாலத்தில் எல்லாவற்றையும் எரித்து விடும் மகாதேஜஸ் அவன். அந்தக் காலத்தில் இந்த அக்கினியும் அழிந்தொழியும். ஆகவே அவனை

Koviloor Digital Library

அக்கினி ஒன்றும் செய்யாது.

அவன் அழிவற்றவன் என்பதை அவன் அக்கினியில் ஆடும் செய்கை காட்டுகிறது.

இரவில் அவன் ஆடுகிறான். எல்லாரும் உறங்கும் சமயம் அது. தன்னுடைய குழந்தைகளாகிய ஆருயிர்கள் எந்தச் செயல்களையும் செய்யாமல், புண்ணிய பாவங்களைப் புரியாமல் உறங்கும்போது ஆண்டவன் ஆடுகிறான். தன்னுடைய குழந்தைகள் குறும்பு செய்வதையும் சண்டையிடுவதையும் மறந்து உறங்கும்போது தாய் களித்திருப்பது போல ஆண்டவன் இருக்கிறான். இந்த உறக்கத்தைத் தினப் பிரளயம் என்பர். எல்லா உயிர்களும் இறைவன் திருவடிக் கீழ் ஒடுங்கிக் கிடக்கும் சர்வப் பிரளயம் போன்றது அது. பிரளய காலத்திலும் இறைவன் மகிழ்ந்து ஆடுகிறான். எல்லா உயிரும் இன்பதுன்ப நுகர்ச்சியின்றி, நன்மை தீமை செய்யாமல் அடங்கிக் கிடக்கும் காலத்தில் இறைவன் ஓய்வு பெற்றவனைப் போலக் களிக்கூத்தாடுகிறான். எல்லாம் ஒடுங்கவும் தான் மட்டும் நித்தியப் பொருளாக நின்று இயங்குவதைக் குறிப்பது அந்தச் செயல்.

வலிய பேயும் அவனும் சேர்ந்து மயானத்தில் ஆடுகிறார்கள். மயானமும் ஒரு கோயிலுக்கு ஒப்பானது. மக்கள் ஒரு பிறவியில் இன்பதுன்பங்களை அநுபவித்துப் பிறகு இறக்கிறார்கள். இறப்பும் ஒருவகையில் உறங்குவதைப் போன்றது. 'உறங்குவது போலும் சாக்கா டுறங்கி, விழிப்பது போலும் பிறப்பு" என்னும் குறளினால் இதனை உணரலாம். எல்லோரும் உறங்கும் இரவில் இறப்பாகிய உறக்கத்தைப் பெறுவதைக் காட்டும் மயானத்தில் இறைவன் ஆடுவது அவன் எப்போதும் இயங்கிக் கொண்டு இருக்கிறான் என்பதைக் காட்டுகிறது.

நம்முடைய உடம்பிலுள்ள உறுப்புக்களை நாம் பயன்படுத்துகிறோம். சில சமயங்களில் சில உறுப்புக்களைப் பயன்படுத்துவதில்லை. நடக்காமல் இருக்கும்போது கால் இயங்குவதில்லை. கண்ணை மூடி உறங்கும்போது கண் இயங்குவதில்லை. இப்படியே ஒவ்வோர் உறுப்பும் இயக்கமில்லாத காலம் உண்டு. உறங்கும்போது எல்லா உறுப்புக்களும் இயங்காமல் இருக்கின்றன. ஆனால் இதயம் எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்கிறது. மற்ற அங்கங்கள் இயங்கும் போதும் அது இயங்குகிறது. அவை செயல் செய்வதின்றிச் சும்மா இருந்தாலும் அது சும்மா நிற்பதில்லை. இதயம்

Koviloor Digital Library

இயங்காமல் உடம்பில் உயிர் வாழ்வதில்லை.

இறைவனும் இதயத்தைப் போல இருக்கிறான். அவன் இயங்குவதனாலே எல்லாப் பொருள்களும் இயங்குகின்றன. அவன் தன் இயக்கத்தால் மற்றவற்றை இயக்குகிறான். அவன் இன்றி எதுவும் இயங்காது. மற்றவை யாவும் இயங்காமல் ஒழிந்தாலும் அவன் தன் இயக்கத்தை, தன் ஆட்டத்தை நிறுத்துவதில்லை.

இதனால் அவனுடைய நித்தியத்தன்மையும், சர்வ காரணனாக இருக்கும் இயல்பும் புலனாகின்றன. அவன் அணிந்த என்பும் மற்றவர்களின் அநித்திய வாழ்வையும் அவனுடைய நித்தியத் தன்மையையும் காட்டுகின்றது.

இப்படி ஆய்ந்து பார்த்தால் அவன் கோலம், அவன் ஆடும் ஆட்டம் யாவுமே அவனுடை தூய பெருமையையே காட்டுகின்றன. இதைக் காரைக்கால் அம்மையார் சொல்கிறார்.

பிறருடைய என்புகளை அணிந்து இரவிலே வலிய பேயும் தானும் மகிழ்ந்து ஆடுகிறான் இறைவன்; தீயில் எம்பெருமான் ஆடுகிறான். இதன் அருமை பெருமைகளை அவனுடைய அன்பர் அல்லாத பிறர் அறியலாகாது. அப்படி ஒருகால் பிறர் அறியமுடியுமானால் அப்போது அவர்கள் மற்றவர்களைப் போன்ற சாமானிய அறிவுடையவர்கள் ஆகமாட்டார்கள். அவர்கள் அநுபவத்தோடு ஒட்டிய பெரிய உணர்வை உடையவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தப் பேருணர்வாக விளங்குபவனும் அந்தப் பெருமான்தான்.

இப்படி அம்மையார் பாடுகிறார்:

பிறர் அறியல் ஆகாப் பெருமையரும் தாமே; பிறர் அறியும் பேருணர்வும் தாமே;பிறருடைய

என்பே அணிந்துஇரவில் நீஆடும் எம்மானார்

வன்பேயும் தாமும் மகிழ்ந்து.

பிறருடைய என்பே அணிந்தவர் என்பதனால் அவர் என்றும் உள்ளவர் என்றும், பேருணர்வும் தாமே என்பதனால் அவர் சித் உருவினர் என்றும், ஆடும் எம்மானர் என்பதனால் ஆனந்த வடிவினர் என்றும் புலனாகும். இதனால் அவர் சச்சிதானந்தமூர்த்தி என்று சொன்னவாறாயிற்று.

இது அற்புதத் திருவந்தாதியில் 30ஆம் பாட்டு.

Koviloor Digital Library

அம்மையப்பருக்காய்த் தம்மையே அர்ப்பணித்த அமர்நீதியார்

தேனம்மை இலக்குமணன்,
காரைக்குடி

பொன், பொருள், திரவியம் எதுவுமே இறைவன் தந்த பொருளுக்கு ஈடானதல்ல. திருத்தொண்டும் இறைப்பற்றுமே நிறைப் பொருள் என்று தம் வாழ்க்கை மூலம் நிறுவி, இறைப் பொருளுக்கு ஈடாகத் தம்மை மட்டுமல்ல தம் குடும்பத்தையே அர்ப்பணித்தார் நாயனார் ஒருவர். அவர்தான் அமர்நீதி நாயனார். இகலோக வாழ்விலும் அவர் மெய்ப்பொருளைப் பற்றிச் சிவலோக வாழ்வினை அடைந்த விதம் பார்ப்போம்.

சோழ நாட்டில் பழையாறை என்னும் ஊரில் பிறந்தவர் அமர்நீதியார். வணிகக் குலத்தைச் சார்ந்த இவர் தொட்டதெல்லாம் பொன்னாகத் துலங்கியதால் பெரும் பொருட்செல்வம் கொண்டிருந்தார். திருநல்லூரில் வாழ்ந்து வந்த அவர் பெருஞ் செல்வந்தராய் இருந்தாலும் சிவன்மேல் பேரன்பு பூண்டு சிவனடியார்களுக்குத் திருவமுது படைத்தல், கௌபீனம் அளித்தல், ஆகிய திருத்தொண்டுகளைச் செய்துவந்தார்.

இதற்கெனவே அவர் திருநல்லூரில் திருமடம் ஒன்றைக் கட்டி, அதில் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்து மகிழ்ந்து வந்தார். மகேசன் தொண்டில் விருப்புற்ற அவர் தம் உற்றார் சுற்றத்தாரோடு திருநல்லூரில் திருவிழாக்களையும் நடத்தி வந்தார்.

Koviloor Digital Library



வேண்டிக் கேட்டுக் கொண்டார். இளம் பிரம்மச்சாரியோ, "நாம் எப்போதும் ஸ்நானம் செய்தபின் தான் போசனம் கொள்வோம். எனவே காவேரியில் நீராடி வருகிறோம்." என்று கூறினார்.

ஒருநாள் அவரது திருமடத்துக்குப் பிராமண பிரம்மச்சாரி ஒருவர் சிவனடியாராக எழுந்தருளினார். அவர் வேறு யாரும் அல்ல சிவபெருமானேதான்; அமர்நீதியாரைச் சோதிக்கத் திருவுள்ளம் கொண்டு, அவ்வாறான வடிவத்தில் வந்திருந்தார். இரு கௌபீனங்கள் முடிந்த தண்டுடன் வந்த அவர் இடையில் ஒரு கௌபீனம் அணிந்திருந்தார். திருமடத்தை அடைந்தவரை எதிர்கொண்டு வரவேற்ற அமர்நீதியார் அன்போடு அவரை வணங்கி உபசரித்தார்.

"தேவரீர் ! தங்கள் வருகையால் திருமடம் பொலிவுற்றது. எந்தப் பிறவியில் யான் செய்த புண்ணியமோ நீங்கள் இங்கே எழுந்தருளியது. இன்று என் மனம் மிகவும் மகிழ்கிறது. தாங்கள் இங்கே திருவமுது செய்தருளவேண்டும்" என

வெளியே செல்லக் காலடி எடுத்து வைத்த அவர் அமர்நீதியாரிடம் திரும்பி, "மேகமூட்டமாய் இருக்கிறது. மழை வரும்போல் தெரிகிறது. எனவே எனது ஒரு கௌபீனத்தை ஈரம் படாமல் இங்கேயே வைத்துக் கொள்ளுங்கள். எனது தண்டில் கொண்டு செல்லும் கௌபீனம் மழையில் நனைந்துவிட்டால் இதை நான் வாங்கி அணிந்து கொள்வேன்" என்று கூறித் தனது தண்டில் இருந்த ஒரு கௌபீனத்தைக் கழற்றி அமர்நீதியாரிடம் கொடுத்தார்.

அமர்நீதியாரும் அதை வாங்கிச் சென்று திருமடத்தின் ஒரு அறையில் பத்திரமாக வைத்துவிட்டு வந்தார். நீராடச் சென்ற சிவனடியாரோ அமர்நீதியாரைச் சோதிக்க எண்ணி, அவரிடம் கொடுத்த கௌபீனம் மறையும்படிச் செய்தார்.

Koviloor Digital Library

மழை கொட்டிக் கொண்டிருந்தது. காவேரியில் நீராடி, மழையிலும் நனைந்தபடி, திருமடம் வந்து சேர்ந்தார் அந்தச் சிவனடியார்.

அவர் அணிந்த கௌபீனமும் தண்டில் முடிந்த கௌபீனமும் ஈரமாய் இருக்க அமர்நீதியாரிடம் தான் அளித்த கௌபீனத்தைக் கொணரும்படிச் சொன்னார். அமர்நீதியாரும் தான் அவரது கௌபீனத்தை வைத்த அறையில் சென்று தேட, அதுவோ மாயமாய் மறைந்திருந்தது. துணுக்குற்ற அமர்நீதியார் அக்கௌபீனத்தைத் தேடித் தேடிச் சோர்ந்தார். அங்கே யாரும் சென்றிருக்கவோ அதை எடுத்திருக்கவோ வாய்ப்பே யில்லை.

அங்கே தாம் சேமித்து வைத்திருந்த கௌபீனங்களில் ஒன்றை எடுத்து வெளியே வந்து சிவனடியாரிடம் கொடுத்து, ”தேவரீர்! மன்னித்தருள வேண்டும். தாங்கள் தந்த கௌபீனத்தைப் பாதுகாப்பான ஓரிடத்தில்தான் வைத்திருந்தேன். தற்போது அதைக் காணவில்லை. இது கௌபீனமாகவே முழுமையாக நெய்யப்பட்டது. எனவே இதை அணிந்து வந்து தேவரீர் திருவமுது செய்ய வேண்டும்” என வேண்டிக் கொண்டார்.

வந்ததே கோபம் சிவனடியாருக்கு, ”அமர்நீதியாரே! இது என்ன மாய்மாலம். நான் தந்த கௌபீனத்தைத் தாரும். இதெல்லாம் யாருக்கு வேண்டும். சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்துக் கௌபீனம் தருவதெல்லாம் என் போன்றோரின் கௌபீனத்தைக் கவர்வதற்கா” எனச் சீறினார்.

அமர்நீதியாரோ, “தேவரீர். அறியாமல் நிகழ்ந்த இத்தவறைப் பொறுத்தருள வேண்டுகிறேன். இந்தக் கௌபீனத்துக்கு ஈடாகப் பொன் பொருளைத் தருகிறேன்” என்று கூறவும், சிவனடியாரோ, “எமக்கெதற்கு உம்முடைய பொன்னும் பொருளும். எம்முடைய கௌபீனத்துக்கு ஈடாக நிறையுள்ள கௌபீனத்தைத் தந்தால் போதும்” என்றார்.

அப்பாடா! என மனம் மகிழ்ந்த அமர்நீதியாரோ தராசைக் கொணரச் செய்து சிவனடியாரின் கௌபீனத்தை ஒரு தட்டில் வைத்து மறுதட்டில் தம்மிடமிருந்த உயர்தரமாய் நெய்யப்பட்ட கௌபீனம் ஒன்றை வைத்தார். சிவனடியாரின் கௌபீனம் இருந்த

Koviloor Digital Library



தட்டு சமமாய் எழும்பவில்லை.

அடியார்களுக்கு அளிப்பதற்கென்று இன்னும் இன்னும் தன்னிடமிருந்த அனைத்துக் கௌபீனங்களையும் வைத்த அவர், தட்டு சமமாக ஆகாததால் மிரட்சி அடைந்து, தம்மிடமிருந்த அனைத்துப் பட்டு வஸ்திரங்களையும் வைத்தார். சிவனடியாரின் கௌபீனம் இருந்த தட்டு மேலேறாததால் திகைத்த அவர் சிவனடியாரிடம், ”ஐய! எவ்வளவு குவித்தாலும் என்னுடைய தட்டு உயர்ந்தே இருக்கிறதே; என்னுடைய மற்ற திரவியங்களையும் வைக்கலாமா?” எனப் பவ்யத்துடன் கேட்க, அனுமதித்த சிவனடியார் ”எதை வேண்டுமானாலும் இடுங்கள். ஆனால் அது என்னுடைய கௌபீனத்துக்கு ஈடான நிறையில் இருக்கவேண்டும். அவ்வளவே” என்றார்.

பொன், பொருள், திரவியங்கள், நவமணிகள் இட்டும் சிவனடியாரின் தட்டு உயராததால் சிவனை வணங்கித் தன் மனைவியையும் மகனையும் தராசில் அமர்த்தினார் அமர்நீதியார். அப்போதும் தட்டு சமமாகாததால், ”சிவனடியார்களுக்குச் செய்யும் திருத்தொண்டை நாங்கள் பிழைபடாமல் மனநிறைவோடு

Koviloor Digital Library

செய்கின்றோம் என்றால் இத்தட்டு இரண்டும் சமமாக நிற்பதாக" என்று கூறித் திருநல்லூரில் கோயில்கொண்ட சிவபெருமானை வணங்கித் திருவைந்தெழுத்தை மனமுருக ஓதித் தானும் ஏறித் தராசுத் தட்டில் அமர்ந்தார். என்னே அற்புதம்! அடுத்த கணம் தட்டுக்கள் இரண்டும் சமமாய் நின்றன.

இறைப்பொருளுக்குச் சமமாக அமர்நீதியாரின் இறைப்பற்றும் திருத்தொண்டும் விளங்கியது கண்டு திருமடத்திலிருந்தோர் வியந்து, ஆகாகாரம் செய்தனர். சிவனும் சிவனடியார்களும் ஒன்றே என்றுணர்ந்த தேவர்களோ இக்காட்சியைக் கண்டு மலர்மாரிப் பொழிந்தனர். கௌபீனம் வேண்டிய பிரம்மச்சாரிச் சிவனடியார் தாம் இருந்த இடத்தில் இடபாரூடராகத் தோன்றித் தம் திருக்கோலத்தை அமர்நீதியாருக்குக் காண்பித்தார். அமர்நீதியாரும், அவர் புதல்வனும், மனைவியாரும் அவரைத் தொழுது வணங்க, இகலோகத்திலே சிவலோக வாழ்வினைப் பெறும், பெரும்பேறு பெற்றார்கள்.

நாலடியார் பாடல்கள்

துறவறவியல்

பாடல் 04

நின்றன நின்றன நில்லா எனஉணர்ந்து
ஒன்றின ஒன்றின வல்லே செயின்செய்க;
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

விளக்கம்:

நிலைபெற்றன நிலைபெற்றன என்று நினைக்கப்பட்ட பொருள்கள் நிலைத்திராது அழியும் என்று உணர்ந்து உங்களால் செய்யக்கூடிய அறங்களைச் செய்ய நினைத்தால் விரைந்து செய்க! (ஏனெனில்) வாழ்நாட்கள் விரைந்து போய்க்கொண்டேயிருக்கின்றன. எமன் கோபித்து வந்துகொண்டேயிருக்கிறான்.

Koviloor Digital Library

சிவாலயங்களின் சிறப்புகள் - 19

சிவனேச செல்வர்களுக்குப் பணிவான வணக்கங்கள்.

சிவாலயங்களின் சிறப்புகளை மாதம் ஒரு திருக்கோயில் என எழுத இருக்கிறேன். இந்தத் தகவல்கள் கோயிலின் ஆலய குறிப்புகளில் இருந்தும் கோயில் குருக்கள் சொல்வதை வைத்தும் எழுதி எழுதியுள்ளேன்.

வே.இராமசாமி, B.Com.F.C.A.,
Chartered Accountant
பலவான்குடி

சீர்காழி

சுவாமியின் பெயர்: பிரமபுரீஸ்வரர், தோணியப்பர், சட்டைநாதர்.

அம்பாளின் பெயர் : பெரிய நாயகி, திருநிலைநாயகி

தல விருட்சம் : பவளமல்லி

தீர்த்தம் : பிரம தீர்த்தம், காளி தீர்த்தம், சூல தீர்த்தம், ஆனந்த தீர்த்தம், வைணவ தீர்த்தம், இராகு தீர்த்தம், ஆழி தீர்த்தம், சங்க தீர்த்தம்,சுக்கிர தீர்த்தம், பராசர தீர்த்தம், அகத்திய தீர்த்தம், கௌதம தீர்த்தம்,வன்னி தீர்த்தம், குமார தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், கேது தீர்த்தம், அண்ட தீர்த்தம், பதினெண்புராண தீர்த்தம், புறவ நதி,கழுமல நதி, விநாயக நதி முதலிய 22 தீர்த்தங்கள்.

வழிபட்டோர்: பிரமன், குருபகவான், திருமால், சிபிச்சக்கரவர்த்தி, காளி, பராசர முனிவர், உரோமசமுனிவர், இராகு, கேது, சூரியன், அக்னி, ஆதிசேடன், வியாசமுனிவர், முருகப் பெருமான், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்துப் பிள்ளையார், முதலியோர்.

இந்தத் திருக்கோயிலின் வளாகத்தில் திருஞானசம்பந்தருக்கு தனி கோயில் அமைந்துள்ளது

திருக்கோயிலின் இதர பெயர்கள்: பிரமபுரம் , வேணுபுரம் ,புகலி ,வெங்குரு ,தோணிபுரம் , பூந்தராய் ,சிரபுரம் ,புறவம் , சண்பை ,சீகாளி

Koviloor Digital Library

முத்து தாண்டவ தீட்சிதர் ஆகியோரும் பாடல்களை பாடியுள்ளார்கள்.

திருஞானசம்பந்தர் தோடுடைய செவியன் என்ற பாடலை பாடிய திருத்தலம் சீர்காழி ஆகும்

இந்த திருக்கோயில் மூன்று தளங்களைக் கொண்டு அமைந்துள்ளது.

கோவிலின் ஒரு பகுதியில் தோணியப்பர் சட்டை நாதர் என்ற பெயருடன் காட்சி தருகிறார் .கோவிலின் வலது புறத்தில் திருநிலை நாயகி அம்மனின் சன்னதி உள்ளது கோயிலின் முன்புறம் பிரம்ம தீர்த்தம் உள்ளது இந்த குளக்கரையில் தான் அன்னை பார்வதி தேவி திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டினார்.

கோயிலில் நுழைந்து ஆஸ்தான மண்டபத்தைக் கடந்தால் கருவறையில் லிங்க உருவில் பிரமபுரி ஈசுவரரைக் காண இயலும். அவருக்கு வலப்பக்கத்தில் மகா

(ஸ்ரீகாளி), கொச்சைவயம் ,கழுமலம்

சட்டை நாதர் இங்கு முக்கிய தெய்வமாக அருள் தருகிறார் .

தேவாரப் பாடல் பெற்ற 274 திருத்தலங்களில் சீர்காழி 14 வது திருத்தலம் ஆகும் .

இத்திருத்தலத்தைப் பற்றி மாணிக்கவாசகர் பட்டினத்தார் நம்பியாண்டார் நம்பிகள் கணநாதர் அருணகிரிநாதர் அருணாசலக் கவிராயர் மாரிமுத்தா பிள்ளை

Koviloor Digital Library

நம்பிக்கை.

இரணியனது உயிர் குடித்த நரசிங்கம் அகங்கரித்துத் திரிந்தபோது அதனை அடக்கி, அதன் எலும்பைக் கதையாகவும், தோலைச் சட்டையாகவும் தரித்த வடுக நாதரே சட்டைநாதர் என்று தலவரலாறு கூறும். இது சிவனது பைரவ மூர்த்தங்களில் ஒன்று. இவரையே ஆபத்துத்தாரணர் என்று மக்கள் வணங்குகின்றனர். என்று தலபுராணம் கூறுகிறது. இதே சட்டைநாதர் முத்துச் சட்டைநாதர் என்ற பெயரோடும் கோயிலின் வலம்புரி மண்டபத்தில் யோக ஸ்தானத்தில் அஷ்ட பைரவர் உருவிலும் காட்சி கொடுக்கிறார்.

மண்டபத்தில் ஞானசம்பந்தர் உற்சவ மூர்த்தியாக இருக்கின்றார். இந்த உற்சவர் சின்னஞ்சிறு குழந்தை வடிவில், பால்வடியும் முகத்தோடு இருப்பார். இவர் கையிலே வழக்கமாக இருக்கும் பொற்றாளம் இராது. இடது கையில் சிறு கிண்ணத்தோடு இருப்பார். வலது கையோ தோடுடைய செவியனாம் தோணி புரத்தானைச் சுட்டிக் காட்டும் வகையில் இருக்கும்.

இந்தப் பேரண்டத்தைச் சுற்றி வளைந்து கிடக்கும் பெருங்கடல் ஊழிக்காலத்தில் பொங்கி எழுந்து அண்டத்தையே அழித்தபோது, உமாமகேசுவர் பிரணவத்தை தோணியாகக் கொண்டு கடலில் மிதந்து, இத்தலத்துக்கு வந்து தங்கித் திரும்பவும் அண்டத்தை உருவாக்கியிருக்கிறார் என்பது

சீர்காழியின் சிறப்புகள்

1. சித்திரை பெருவிழாவில் இரண்டாம் நாள் உற்சவம் ஆக திரு முலைப்பால் உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது

2. கணநாத நாயனார் அவதரித்தத் திருத்தலம் . கோயில் வளாகத்தில் கணநாத நாயனாரின் திருவுருவச் சிலை உள்ளது.

Koviloor Digital Library

3. திருநாவுக்கரசர் அப்பர் என்ற பட்டம் பெற்ற திருத்தலம்

4. சுந்தரருக்கு சிவபெருமான் காட்சியளித்த ஸ்தலம். திருஞானசம்பந்தர் அவதரித்த தலம் என்பதால் சுந்தரர் ஊரின் எல்லையில் கால் வைப்பதற்கு அஞ்சி நிற்கையில் சிவபெருமான் அவருக்கு காட்சியளித்தார்

5. அர்த்த ஜாமம் பூஜைக்குப் பிறகு சட்டைநாதருக்கு புனுகு சட்டம் சாத்தப்படுகிறது

6. முழு தேங்காயை பிரசாதமாக சட்டைநாதர் கோவிலில் தருகிறார்கள்

7. அஷ்ட பைரவர்கள் என அழைக்கப்படும் எட்டு பைரவர்களும் அருள்தரும் ஒரே திருத்தலம் இதுதான்

8. சிவபெருமான் இங்கு குரு, இலிங்க, சங்கம என்ற மூன்று வடிவங்களில் அருள் தருகிறார் . பிரமபுரீஸ்வரர் இலிங்கமாகவும், ஞானசம்பந்தருக்கு ஞானப்பால் தந்தருளிய தோணியப்பர் குருமூர்த்தமாகவும், சட்டைநாதர் சங்கம வடிவினராகவும் உள்ளது.

9. திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் ஆகிய மூவராலும் பாடல் பெற்ற ஸ்தலம் .பாடல் பெற்ற ஸ்தலங்களில் 14 வது ஸ்தலம் சீர்காழி

10. மாணிக்கவாசகர், அருணகிரிநாதர், கணநாதர், நம்பியாண்டார் நம்பிகள், பட்டினத்தார், சேக்கிழார், அருணாசல கவிராயர், மாரிமுத்தா பிள்ளை, முத்து தாண்டவ தீட்சிதர் ஆகியோரும்கூட இத்தலத்தின் மீது பாடல்கள் பாடியுள்ளனர்

11. கோயில் மூன்று தளங்களைக் கொண்டதாக இருக்கிறது. பெரிய பகுதியில் இறைவன் தோணியப்பர், சட்டைநாதர் எல்லாம் உள்ளனர். வட பக்கத்தில் திருநிலை நாயகி கோயில் உள்ளது. அக்கோயிலின் முன் பிரம தீர்த்தம் உள்ளது. இந்தத் தீர்த்தக் கரையிலேயேதான் திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்டிருக்கிறார்.

12. சீர்காழி அருணாச்சலக்கவிராயர் இத்திருக்கோயிலுக்கு தலபுராணம் பாடியுள்ளார்.

- காலை தரிசனம்: காலை 6:00 மணி மதியம் 12:30 மணி
- மாலை தரிசனம்: மாலை 4:00 மணி இரவு 9:00 மணி

Koviloor Digital Library

திவ்ய தேச கவிதை தரிசனம் –36

திருத்தெற்றியம்பலம்

அழ. மணிமேகலை,
காரைக்குடி

108 திவ்ய தேசங்களுள் முப்பத்தியாறாவது திவ்ய தேசம், திருத்தெற்றியம்பலம். சோழநாட்டுத் திருப்பதிகளுள் இது முப்பத்தியாறாவது திவ்யதேசமாகும். குடமாடு கூத்தன் கோயிலிலிருந்து 500 மீட்டர் தூரத்தில் உள்ளது இத்தலம். சீர்காழி ரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கில் 8கிமீ தொலைவில் திருநாங்கூருக்கு உள்ளேயே அமைந்திருக்கிறது இத்திருத்தலம்.

திருநாங்கூரிலும் திருநாங்கூரைச் சுற்றிலும் அமைந்துள்ள 11 திருநாங்கூர் திருப்பதிகளுள் திருக்காவளம்பாடி, திருஅரிமேயவிண்ணகரம், திருவண்புருடோத்தமம், திருச்செம்பொன்செய் கோயில், திருமணி மாடக்கோவில் திருவைகுந்த விண்ணகரம் மற்றும் திருத்தேவனார்த் தொகை ஆகிய ஏழு தலங்கள் குறித்து முன்பதிவில் கண்டுள்ளோம். இத்தலம் திருநாங்கூரில் நாம் காணப்போகும் எட்டாவது தலமாகும்.

திருநாங்கூர் வந்த பதினொரு எம்பெருமான்களில் இவர் ஸ்ரீரங்கத்து ரெங்கநாதனாவார். அதனாலேயே, அரங்கனைப் போல, ஆதிசேடன் மேல் சயனித்து, பேரழகு வாய்ந்தவராகக் காணப்படுகிறார். இந்தப் பதினொரு

Koviloor Digital Library

பெயர்ப்பலகையும் ஸ்ரீ பள்ளி கொண்ட ரங்கநாதர் திருக்கோயில் என்ற பெயரையே தாங்கியுள்ளது.

இக்கோயிலின் வாசல் கடந்து வெளிப் பிரகாரத்தில் பலிபீடம், பெரிய திருவடி.

அதைக் கடந்தால் ஒரு மூன்று நிலையுள்ள ராஜகோபுரம். கொடிமரம் இல்லை.

எம்பெருமான்களில், இவர் மட்டுமே சயனத்திருக்கோலத்தில் காணப்படுகிறார். இவரும் கருட சேவைக்காக திருநாங்கூர் எழுந்தருளுவார்.

108 வைணவ திவ்ய தேசங்களில் இத்தலம் ஒன்றுக்கு மட்டுமே அம்பலம் என்னும் சொல் எடுத்தாளப்பட்டுள்ளது. “தெற்று“ என்றால் மேடு. மேடான இடத்தில் இறைவன் எழுந்தருளியிருப்பதால், இத்தலம் திருத்தெற்றியம்பலம் ஆயிற்று. திருத்தெற்றியம்பலம் என்றால் அங்குள்ள பலருக்கும் தெரிவதில்லை. பள்ளி கொண்ட பெருமாள் சன்னதி என்று கூறினால் அனைவருக்கும் தெரியும். கோயிலில் உள்ள

இங்குள்ள,

மூலவர் – செங்கண்மால் ரங்கநாதர், லஷ்மிரங்கர்

தாயார் – செங்கமலவல்லி

தீர்த்தம் – சூர்ய புஷ்கரணி

விமானம் – வேத விமானம்

கோலம் – கிழக்கு நோக்கிய சயனத் திருக்கோலம்

மூலவர் செங்கண்மால் என்ற ரங்கநாதர், பாம்புப் படுக்கையில் நான்கு புஜங்களுடன் ஆதிசேடன் மீது சயனத் திருக்கோலத்தில் இருக்கின்றார். கூடவே ஸ்ரீதேவி, பூதேவி நாச்சியார்கள். ஸ்ரீரங்கத்து ரங்கநாதருக்கு இரண்டே கைகள்

தான். தேவியரும் அருகில் கிடையாது. இப்பெருமான் பார்ப்பதற்கு மிகவும் பேரழகு வாய்ந்தவர். செங்கண்மால் என்று அழைப்பதற்கு ஏற்ப, கண்ணழகு மிக்கவர். முகத்தை நன்றாகத் திருப்பி, நம்மைப் பார்ப்பது போலவே இருப்பார். இப்பெருமானைச் சேவிப்பவர்களுக்கு அரசு பதவி சம்பந்தமான வேண்டுதல்கள் நிறைவேறும். தாயாருக்குத் தனிச்சன்னதி.

இரண்யாட்சகன், பூமிதேவியை அப்படியே பாய் போலச் சுருட்டிக்கொண்டு, பாதாள லோகத்துக்குள் கொண்டுபோய் மறைத்து வைத்துக்கொள்கிறான்.

இவன் பிரஹலாதனின் தந்தை ஹிரண்யகசிபுவின் அண்ணன். தேவர்கள் எல்லோரும் பெருமாளிடத்தில் போய் இந்த அக்கிரமத்தைச் சொல்கின்றார்கள். பெருமாள் வராஹ அவதாரம் எடுத்துக் காலகேயபுரம் என்ற ஊர் நோக்கிக் கிளம்புகிறார்.

மஹாலெட்சுமித் தாயாரும், ஆதிசேடனும், “நீங்க இல்லாத இடத்தில் எங்களுக்கு என்ன வேலை? நாங்களும் கூடவே வருகிறோம்“ என்று சொல்ல, “அங்கெல்லாம் நீங்கள் வரக்கூடாது. நீங்கள் சென்று பலாசவனத்தில் தவம் செய்து எனக்காகக் காத்திருங்கள். நான் சென்ற வேலையை முடித்துவிட்டு அங்கே வந்துவிடுகிறேன். இந்த பலாசவனத்

தலமானது, கலியுகத்தில் ‘திருத்தெற்றியம்பலம்‘ என்று அழைக்கப்படும். என் தீவிர பக்தரான ஸ்ரீபாஷ்யகாரர், தீட்சை பெற்ற 108 வைஷ்ணவர்களை அழைத்து வந்து, அங்கே என்னை ஆராதனை செய்ய இருக்கிறார். நான் கலியுகம் முழுவதும் அங்கேயே நித்திய வாசம் செய்து உலகத்தைக் காத்து இரட்சிக்கப் போகிறேன்“ என்று பெருமாள்

Koviloor Digital Library

கூறி அருளினார்.

இவர்கள் இங்கிருந்து கிளம்பிச் செல்வதற்குள், வேலை முடிந்து பூமிதேவியை இருப்பிடத்துக்குக் கொண்டுவந்துவிட்டார், எம்பெருமான். ஆக்ரோஷமாக, இரண்யாட்சகனோடு போர் செய்ததால், கண்ணெல்லாம் சிவந்து போன கோலத்தில், மிகவும் களைப்பாக வந்தவர், ஆதிசேடன் அங்கே இருந்ததும், சயனக்கோலத்தில் தங்கிவிட்டார். அதனால் தான், இவர் பெயர் செங்கண்மால் என்று ஆகியிருக்கும். ஸ்ரீதேவி அவரது நான்கு புஜங்களையும் இதமாகப் பிடித்துவிட, அவரது கால்மாட்டில், பூதேவி தன்னை மீட்டருளிய அந்தப் பரம்பொருளுக்கு நன்றி சொல்வது போல் அமர்ந்தாள்.

இங்கிருக்கும் சூரிய புஷ்கரணி குறித்தும் ஒரு வரலாறு உண்டு. பெருமாள் பாற்கடலைக் கடைய, அமிர்தம் கிடைத்தது. கிடைத்த அமிர்தத்தை, தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பிரித்துக் கொடுக்க வேண்டும். ஆனால், எம்பெருமானோ அமிர்தத்தைத் தேவர்களுக்கு மட்டுமே கொடுக்க நினைத்தார். அசுரர்களை மயக்குவதற்காகப் பெருமாளே மோகினி அவதாரம் எடுத்தார். கையில் அகப்பையுடனும், அமிர்தக் கலசத்துடனும் தேவர்களை ஒரு பக்கமாகவும், அசுரர்களை ஒரு பக்கமாகவும் அமரவைத்தார்.

Koviloor Digital Library

"சின்னப் பிள்ளைகளான தேவர்களுக்கு முதலில் கொடுத்துவிட்டுப் பின், அசுரர்களாகிய உங்களுக்குத் தருகிறேன்" என்று அசுரர்களை சமாதானப்படுத்திய பின், தேவர்களுக்கு முதலில் அமிர்தத்தைக் கொடுக்கத் தயாரானார். தேவர்களுக்குக் கொடுக்கக் கொடுக்க, அகப்பையில் ஒன்றும் மிஞ்சாது என்பதையும் சதி நடப்பதையும் அசுரர்கள் புரிந்து கொண்டனர். சிம்ஹிகா என்ற அசுரப் பெண்ணின் புதல்வர்கள் இராகு மற்றும் கேது. இவர்களில் இராகு என்பவன், தேவராகத் தன்னை வேடமிட்டுக் கொண்டு தேவர்கள் வரிசையில் அமர்ந்து விட்டான். இதைச் சூரிய சந்திரர்கள் கவனித்து விட்டனர். பெருமாள் வரிசையாக அமிர்தத்தைக் கொடுத்துக் கொண்டு வந்தபோது, சூரிய சந்திரர் ஜாடை காட்ட, அகப்பையால் பெருமாள், இராகு தலையைத் தட்ட, தலை தனியாகச் சென்று வீழ்ந்தது. அதனால் தன்னைக் காட்டிக் கொடுத்த சூரிய சந்திரர்களை கிரகணம் தோறும் பிடித்துக் கொண்டான். இதனால் பயந்து போன சூரிய சந்திரர்கள், சூரிய புஷ்கரணி, சந்திர புஷ்கரணி என்ற இரண்டு புஷ்கரணிகளை ஏற்படுத்தினர். சூரிய புஷ்கரணிக்குள் மறைந்து கொண்டிருந்த சூரியனுக்குத் தான், இத்தலத்துப் பெருமாள் அனுக்கிரகம் செய்தார்.

"திருத்தெற்றியம்பலம்" குறித்து காப்பியக் கவிஞர் நா.மீனவனார் எழுதிய பாடல்களும், அவற்றின் விளக்கங்களும் பின்வருமாறு.

1. சிறப்பு மிகுந்த செல்வத்தை உடைய இத்தலத்து மூலவரான செங்கண்மால் ரங்கநாதர், பசுந்துளவ மாலையை

Koviloor Digital Library

அணிந்திருப்பவன். தனது தங்கை சுபத்திரையைத் திருமணம் செய்து கொண்டு தனக்கு மைத்துனரான அருச்சுனனுக்கு உதவுவதற்காய், தேரோட்டியாக இருந்தவன். அத்தகைய எம்பெருமான், திருத்தெற்றியம்பலத்தில் கார்வண்ண மேனியனாய் இருக்கின்றான். அவனை வணங்குவோமாக.

சீரணிந்த செல்வத்துச் செங்கண்மால் பசுந்துளவத்

தாரணிந்தான் மைத்துனர்க்காய்த் தானுதவ வண்ணமணித்

தேரணிந்த பரிநடத்தித் திருத்தெற்றி அம்பலத்தே

காரணிந்த மேனியனாய்க் காண்கின்றான் வணங்குமினே.

2. ஆதிசேஷன் மேல் சயனித்துக் கொண்டிருக்கும் திருவரங்கன், மாடங்களின் மேல் மேகங்கள் உலவிக் கொண்டிருக்க, அந்த மேகங்களுக்கிடையில் நிலவு ஒளிர்ந்து கொண்டிருக்க, வானத்தைத் தொடுமளவு உயரம் கொண்ட கோபுரத்தைக் கொண்ட கோயிலில் இருந்து அருள்செய்து கொண்டிருக்கிறான். அவனுடைய திருப்பாதங்களைச் சேருவோர் பயன்பெறுவார். அதனால் திருத்தெற்றியம்பலத்துக்கு சென்று அவன் திருத்தாள்களில் பணிந்து, கும்பிட்டு வாழுவோமாக.

சேடன்மேல் சயனித்த செல்வமிகு திருவரங்கன்

மாடமேல் மஞ்சுலவ மஞ்சிடையில் மதியுலவ

நீடுவான் தொடுகோயில் நின்றிலங்கி அருள்வான்தாள்

கூடுவார் பயன்பெறுவார் கும்பிட்டு வாழுமினே.

3. இத்தலத்தில் சயனித்திருக்கும் செங்கண்மால் ரங்கநாதரின் குழலூதும் இசையில், தாயார் செங்கமலவல்லியுடன் அழகிய ஆபரணங்கள் அணிந்த பெண்கள் அனைவரும் மயங்கிடுவர். வலிமை கொண்டவனின், அளப்பதற்கு இயலாத அழகைக் கொண்டவனின், தீங்கு செய்வோர்க்குப் பொல்லாதவனாய் இருக்கும் கோபாலனின் பொன்னடிகளைப் போற்றுவோமாக.

வல்லியெனும் செங்கமல வல்லியுடன் ஏந்திழையார்

எல்லாரும் கூடியிவன் இசைகுழற்கு மயங்கிடுவார்

வல்லானை அளப்பரிய

Koviloor Digital Library

வடிவானை அடையலர்க்குப்
பொல்லானைக் கோபாலன்
பொன்னடியைப் போற்றுமினே.

4. சூரியனின் திருப்புதல்வனான கர்ணன், போர்க்களத்தில் விழுந்தபோது, மனமுருகி, கர்ணனுடைய புண்ணியங்கள் அத்தனையும் வேண்டியவன் எம்பெருமான். நரசிம்ம அவதாரம் எடுத்த நாராயணனின் பாதமலரை நாடியவர்களுடைய அகத்தில், எம்பெருமான் இருந்திடுவான். அவனுடைய புகழைப் பேசுகின்ற வேதங்களை ஓதுவோமாக.

பகலவனின் திருமதலை
படுகளத்தில் விழுங்காலை
அகமுருகிப் புண்ணியங்கள்
அத்தனையும் வேண்டியவன்
நகமெடுத்த நாரணனார்
தாள்மலரை நண்ணியவர்
அகமிருப்பான் புகழ்பேசி
ஆரணங்கள் ஓதுமினே.

5. பூமிதேவியைத் தன்னுடைய துணையாகக் கொண்டு, தாமரையில் வாழுகின்ற எம்பெருமானை, நாவில் உறைகின்ற மாதான சரஸ்வதியைத் துணையாகக் கொண்ட நான்முகனைத் தனது நாபியிலிருந்து தோற்றுவித்தவனை, அரசனாய் இருக்கின்றவர்கள் கும்பிடுகின்ற நற்பாதங்களை உடையவனை, பசுக்கூட்டத்தைக் காத்த கண்ணனை நாம் வணங்குவோமாக.

பூமாதைத் தான்புணர்ந்த
புண்டரிகக் கண்ணானை
நாமாதைப் புணர்தேவை நாபி
யிலே தந்தானைக்
கோமானாய் வந்தவர்கள்
கும்பிடுநற் றாளானை
ஆமாவின் நிரைகாத்த
அச்சுதனை வணங்குதுமே.

மங்களாசாசனப் பாடல்

"நிறையப் பானைகளுடன் உயர்ந்திருக்கும் தென்னை மரங்களிலிருந்து மட்டையுள்ள தேங்காய்கள், மாமரங்களில் விழ, அதனால் உதிர்ந்த மாம்பழங்களை உருட்டிக் கொண்டும், மலர்களைச் சுமந்து கொண்டும் பெருகி வரும் பொன்னி நதி, மேட்டு நிலங்களிலிருந்து வாய்க்கால்களாகப் பிரியும் திருநாங்கூரில், திருத்தெற்றியம்பலத்தில் எனது செந்தாமரைக் கண்ணன் அருள்புரிகின்றார். அவர்

கி ரு ஷ் ண ா வ த ா ர த் தி ல் , கடைந்த பசு வெண்ணெயை உண்ண, படலிட்டு மூடி வைத்த சிறு குடிசைகளின் உள்ளே நுழைந்து, வேல்விழி கோபியர்களுடைய புடைவைத் தலைப்பைப் பிடித்திழுத்து இன்பமான குறும்புகளை செய்து ஆயர்பாடியெங்கும் திரிந்தார். அந்த தாமோதரனை இத்தலத்தில் காண்போம்" என்று கூறும் திருமங்கையாழ்வாரின் பத்து மங்களாசாசனப் பாடல்களுள் ஒன்று.

"படலடைந்த சிறுகுரம்பை நுழைந்து புக்குப்
ப சு வெ ண் ணெ ய் பதமாரப் பண்ணை முற்றும்
அடலடந்த வேற்கணார் தோக்கை பற்றி
அ ல ந் த லை மை செய்துழலும் ஐயன் கண்டீர்
மடலெடுத்த நெடுந்தெங்கின் பழங்கள் வீழ
ம ா ங் க னி க ள் திரட்டுருட்டா வருநீர்ப் பொன்னி
திடலெடுத்து மலர்சுமந்து அங்குஇழியும் நாங்கூர்த்
தி ரு த் தெ ற் றி யம்பலத்துஎன் செங்கண்மாலே."
என்ற பாடல்.

நாலடியார் பாடல்கள்

துறவறவியல்

பாடல் 05

என்னானும் ஒன்றுதம் கையுறப் பெற்றக்கால்
பின்னாவ தென்று பிடித்திரா முன்னே
கொடுத்தார் உயப்போவர் கோடில்தீக் கூற்றம்
கொடுத்தாறு செல்லும் சுரம்.

விளக்கம்:

ஏதாகிலும் ஒரு பொருள் தமது கையில் சேரப் பெற்றால், முதுமைக் காலத்தில் பயன்படும் என்று அதனைப் பிடித்து வைத்திராமல் அப்பொருள் அழிவதற்கு முன்பே அறம் செய்தவர்கள், தனது தொழிலில் தவறாத கொடிய எமன், பாசக் கயிற்றால் கட்டியிழுத்துச் செல்லும் பாலை வழியினின்றும், தப்பிச் செல்வர். (அறம் செய்பவர் நரகம் புகார்; துறக்கம் எய்துவர் என்பது கருத்து.)

Koviloor Digital Library

பெரியபுராணக் கதைக் களம்

பகுதி – 19

அன்பர்களே !

தொண்டர்தம் பெருமை அளவிடற்கு அரியது. அவர்களின் அருள் வரலாறு நம்மை நல்வழியில் நடத்தும். திருநெல்லையின் இவ்விதழில் புதுமை இணைப்பாகப் பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள அறுபத்து மூன்று அருந்தொண்டர் கதைகள் ஒவ்வொன்றாகக் காதுகளுக்கும், கண்களுக்கும் மனதிற்கும் இன்பம் சேர்க்கும் வகையில் கதைவடிவில் ஒளிபரப்பாகிறது. கேட்டு, உணர்ந்து அனுபவித்து மகிழுங்கள்.

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

Koviloor Digital Library

தென் சபாநாயகர் கோயில் தரிசனம்

உ

அருள்மிகு சிவகாம சுந்தரி உடனுறை அருள்மிகு ஆனந்த நடராச மூர்த்திக்கு புரட்டாசி மாத சதுர்த்தசி திதி மகா அபிடேகம் **05-10-2025** அன்று மாலை வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஐப்பசி – கார்த்திகை மாத வழிபாட்டு நிகழ்ச்சிகள்

01.11.25	வளர்பிறை ஏகாதசி	காலை	பெருமாள் வழிபாடு
03.11.25	பிரதோஷம்		
05.11.25	பௌர்ணமி	காலை	சிவகாமி அம்மன் வழிபாடு
		மாலை	அன்னாபிஷேகம்
06.11.25	கார்த்திகை	மாலை	ஸ்ரீ ஆறுமுகர் வழிபாடு
08.11.25	சங்கடஹர சதுர்த்தி	மாலை	விநாயகர் வழிபாடு
12.11.25	தேய்பிறை அஷ்டமி	மாலை	வைரவர் வழிபாடு
17.11.25	பிரதோஷம்		
24.11.25	கார்த்திகை சோமவாரம்	மாலை	ஆதிமூல நாதருக்கு சங்காபிஷேகம்
28.11.25	வளர்பிறைஅஷ்டமி	மாலை	வைரவர் வழிபாடு

Koviloor Digital Library

ஒலிப்பேழை

கம்ப வாரிதியின் பக்கம்

திருநெல்லை இதழில் மாதந்தோறும் கம்பவாரிதி இலங்கை திரு ஜெயராஜ் அவர்களிடம் வினாக்களை எழுப்பி அவ்வினாக்களுக்கு விடையை அவர்களின் குரல் வழியாகப் பெற்று திருநெல்லையில் பதிவிடுகிறோம்.

கேள்வி:1

மணிவாசகர் பிறவி துன்பத்தைப் பெற்றி சிவபுராணத்திலே பாடுகையில், பிறவிகளுடைய வகைகளை எல்லாம் சொல்லி , இத்தனை பிறவிகளை நான் அடைந்தேன் என்று சொல்லுகிறார். இதிலே கல்லாய் மனிதராய் என்று வருகிறதே. அப்படியானால் கல் என்பதும் ஒரு பிறவிதானா? இந்த கேள்விக்கு பதில் தந்தருள வேண்டுகிறோம்

பதில்:1

Koviloor Digital Library

பயிற்சிப் பேழை

ஞானசம்பந்தர் தேவாரம்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

திருநாவுக்கரசர் தேவாரம்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

சுந்தரர் தேவாரம்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

திருப்புகழ்

மேலே காணும் பதிவின் புற வழி இணைப்புக்கு இங்கே சொடுக்கவும்

கோவிலூர் ஆண்டவர் நூலகம்

கோவிலூரில் அமைக்கப்பெற்றுள்ள ”கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில்” சுமார் 44,000 க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. நூல் விவர அட்டவணையைப் பதிவிறக்கம் செய்ய இங்கு சொடுக்கவும்.

கோவிலூர் ஆண்டவர் இணைய நூலகம்



கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள நூல்கள் அனைத்தையும் கோவிலூர் ஆண்டவர் நூலகம் என்ற இணையதள நூலகத்தில் பதிவேற்றம் செய்து தமிழ்க் கொடையாக அளிக்க முடிவு செய்துள்ளோம்.

Koviloor Digital Library

தற்போது சுமார் 8,376 அரிய நூல்கள் இணைய நூலகத்தில் உள்ளன.

இப்போது நாள் ஒன்றுக்கு சுமார் 3000 பக்கங்களைப் புதிதாக இந்த நூலகத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்கலாம்/ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்க / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள (பட்டியலில் காட்டப்பெற்றுள்ள) எந்த நூலாவது உங்களுக்குத் தேவை என்றால் நூலகப் பொறுப்பாளர் திருமதி.சோமசுந்தரி அவர்களைத் (தொலைபேசி எண் 9488124941 என்பதில்) தொடர்பு கொள்ளவும். அந்த நூல் பதிப்புரிமைக்கு அப்பால் இருக்கும் நிலையில் அதை நம் இணைய நூலகத்தில் சேர்த்திட ஆவன செய்கிறோம். தாங்களும் அந்த நூலை உங்கள் வீட்டில் இருந்து இணையவழியாகப் படிக்கலாம். நூல் இணையத்தில் சேர்த்தபின் உங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும். நீங்கள் அந்த நூலை இணைய நூலகத்தில் படித்துக் கொள்ளலாம் அல்லது பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதற்கு எந்தக் கட்டணமும் இல்லை

இணைய நூலகத்தைப் பயன்படுத்துவோம். இறை தத்துவங்களை அறிவோம்.

இப்போது சில இணையக்கோளாறு காரணமாக அடிக்கடி நமது மின் நூலகம் இணைப்பு தடைப்பட்டு வருகிறது.

அவ்வாறு தடைப்பட்டு வரும் சூழலில் அதற்கு மாற்றாக தார் பிரவுசர் என்ற பிரவுசரை கொண்டு நமது நூலகத்தை நீங்கள் தொடர்பு கொள்ள முடியும். அதற்குரிய லிங்க் இத்துடன் இணைத்து இருக்கிறோம்

https://www.torproject.org/download/

Koviloor Digital Library

முந்தைய இதழ்களை படிக்க அந்தந்த லிங்கை கிளிக் செய்யவும்

மலர் 1

திருநெல்லை – ஆவணி 2023

திருநெல்லை – புரட்டாசி 2023

திருநெல்லை – ஐப்பசி 2023

திருநெல்லை – கார்த்திகை 2023

திருநெல்லை – மார்கழி 2024

திருநெல்லை – தை 2024

திருநெல்லை – மாசி 2024

திருநெல்லை – பங்குனி 2024

திருநெல்லை – சித்திரை 2024

திருநெல்லை – வைகாசி 2024

திருநெல்லை – ஆனி 2024

திருநெல்லை – ஆடி 2024

மலர் 2

திருநெல்லை – ஆவணி 2024

திருநெல்லை – புரட்டாசி 2024

திருநெல்லை – ஐப்பசி 2024

திருநெல்லை– கார்த்திகை 2024

திருநெல்லை– மார்கழி 2025

திருநெல்லை– தை 2025

திருநெல்லை– மாசி 2025

திருநெல்லை– பங்குனி 2025

திருநெல்லை– சித்திரை 2025

திருநெல்லை– வைகாசி 2025

திருநெல்லை– ஆனி 2025

திருநெல்லை– ஆடி 2025

Koviloor Digital Library

முந்தைய இதழ்களை படிக்க அந்தந்த லிங்கை கிளிக் செய்யவும்

மலர் 3

திருநெல்லை – ஆவணி 2023